
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62:10**

**Translated from**
**BS#949**
**July-Aug 2025**

**பொருளடக்கம்**

✡ உம்முடைய வசனம் முழுவதும் சத்தியம்........................... 2

✡ இழந்து போனதும், திரும்பப் பெற்றுக் கொண்டதுமான ஆளுகை.................... 13

✡ தேவனுடைய விசேஷித்த ஜனங்களின் சிறப்பியல்புகள்................................ 18

✡ வேதாகம வினா............................... 19


**BS Tamil Version - 94** **2025**

# உம்முடைய வசனம் முழுவதும் சத்தியம்

**“உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம், உம்முடைய நீதி நியாயமெல்லாம் (நிலைத்திருக்கும்) நித்தியம்” – சங். 119:160** (ASV)

இந்த வாக்கியத்தை ஆழ்ந்து யோசித்த பின்பு, தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளையானவன், “**வீணான வார்த்தைகள்** (உபயோகமற்ற அல்லது தீங்கு விளைவிக்கிற) **யாவையுங் குறித்து**” தான் கணக்கு கொடுக்க வேண்டும் என்பதை அறிந்துணர்ந்து கொள்வான். மத். 12:36. நம்முடைய வார்த்தைகள் எல்லாம் நம்முடைய இருதயங்களைச் சுட்டிக் காட்டும் ஒரு அட்டவணையாக கர்த்தரால் எடுத்துக் கொள்ளப்படுகிறது. நம்முடைய வார்த்தைகள் கலகம் விளைவிப்பவையாக அல்லது நேர்மையற்றதாக அல்லது மடத்தனமானதாக அல்லது பொறுப்பற்றதாக அல்லது அன்பற்றதாக, நன்றியற்றதாக பரிசுத்தமற்றதாக அல்லது கற்பற்றதாக இருக்குமானால், “**இருதயத்தின் நிறைவினால் வாய்பேசும்**” என்ற கோட்பாட்டின்படி இருதயமானது அதற்கேற்றபடி நியாயந் தீர்க்கப்படுகிறது. இவ்வாறாக, நம்முடைய வார்த்தைகள், நம்முடைய அன்றாட ஜீவியத்தின் பல்வேறான சூழ்நிலைகள் எல்லாவற்றிலும், நம்முடைய இருதயங்களின் நிலைமைப் பற்றி தொடர்ச்சியாக தேவனுக்கு முன்பாக சாட்சிபகருவதாக இருக்கின்றன. எனவே நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகள் சுட்டிக்காட்டுவது என்னவெனில்: மேலும் இந்த விஷயத்தின் இந்த நோக்கில், “**தேவ சமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம் பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு: தேவன்** (நம்முடைய நியாயாதிபதி) **வானத்திலிருக்கிறார்** (சிங்காசனத்தின் மீது), **நீ பூமியிலிருக்கிறாய்** (தேவனுடைய தண்டனையின் கோலுக்கு முன்பாக பரீட்சையின் கீழிருக்கிறாய்) **ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக**” (பிர. 5:2) என்கிறதான இந்த எச்சரிக்கை எவ்வளவு ஏற்ற காலத்துக்குரியதாக இருக்கிறது.

நம்முடைய வார்த்தைகளில் ஏற்படுகிற பொறுப்பைப் பற்றிய கர்த்தருடைய வாக்கியத்துக்கு இசைவாக, “**தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்; தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்**” (நீதி. 13:3) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. பொல்லாத அல்லது அலப்புகிற வழியில் பேசும் நாவு, தேவனையும் கூட அவமதிக்கிறது என்பதில், எப்படிப்பட்ட பயம் நிறைந்த பொறுப்புணர்ச்சி நாவுடன் இணைந்திருக்கிறது! “**தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்**” (1 பேது. 4:7; 1:13; 5:8)




என்ற அப்.பேதுருவின் தடைஉத்தரவு எவ்வளவு அவசியமாயிருக்கிறது.

சங்கீதக்காரன் இந்த பொறுப்பை உணர்கிற எல்லாருடைய உதடுகளுக்குள்ளாகவும், இந்த ஜெபத்தை வைக்கிறார், “**கர்த்தாவே என் வாய்க்கு காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக் கொள்ளும், என் இருதயத்தை துன்மார்க்கத்திற்கு இணங்கவொட்டாதேயும்.**” “**என் கன்மலை–யும், என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தை–களும், என் இருதயத்தின் தியானமும், உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக,**” “**உம்முடைய பிரமாணங்களை நீர் எனக்கு போதிக்கும் போது, என் உதடுகள் உமது துதியைப் பிரஸ்தாபப் படுத்தும், உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள், ஆதலால் என் நாவு உம்முடைய வசனத்தை விவரித்துச் சொல்லும். நான் உம்முடைய கட்டளைகளைத் தெரிந்துக் கொண்டபடியால், உமது கரம் எனக்கு துணையாயிருப்பதாக, கர்த்தாவே உம்முடைய இரட்சிப்பின்மேல்** (எல்லா பாவங்களிலிருந்தும், பூரணத்துக்காகவும், பரிசுத்த அலங்காரத்துக்காகவும்) **ஆவலாயிருக்கிறேன். உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி.**” (சங். 141:3,4; 19:14; 119:171-174).

அதாவது, அபூரணமான ஜீவிகளாக இருக்கிற நாம் எப்போதுமே வார்த்தையிலும், செயலிலும் பூரணமாக இருக்கலாம் என்பது சாத்தியமாவதில்லை. நாம் எவ்வளவு பெரும் முயற்சிகள் எடுத்தாலும், சில சமயங்களில் நாம் சொல்லிலும், அதைப்போலவே செயலிலும் தவறு செய்து விடுவோம். இருப்பினும், நம்முடைய சொற்கள் மற்றும் வழிகளின் பூரணமான நிபுணத்துவம் ஜாக்கிரதையாகவும், உண்மையான முயற்சியினால் தேடப்படவேண்டிய காரியமாயுமிருக்கிறது. ஆனால் எப்படியிருந்தாலும், ஒவ்வொரு வீணான வார்த்தைக்கும் நாம் நம்முடைய இந்த

**COURTESY BY :**
**The Bible Standard** -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, **Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

நியாயத்தீர்ப்பு நாளில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். நம்முடைய வழிகளை அனுதினமும் ஆராய்ந்து பார்ப்பதால், ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய கடமையாயிருக்கிறதான - எந்த குறிப்பிட்ட காரியத்திலாவது நம்முடைய வார்த்தைகள் கர்த்தருக்கு கனவீனம் உண்டாக்கி வருவதை நாம் கண்டுபிடித்தால், "**ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரரா யிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்**" (1 யோவா. 2:1) என்பதை நாம் உடனடியாக நினைவு கூர வேண்டும்; மேலும் பிரதிஷ்டை செய்த பிள்ளை நம்முடைய பரலோக பிதாவிடம், நம்முடைய தவறை நாம் மெய்யாகவே உணர்ந்து கொள்கிறதையும், அவருடைய நாமத்தையும், அவருடைய காரியத்திற்காக பரிசுத்தமான நடக்கையினாலும், பேச்சினாலும் அவரைக் கனப்படுத்த தவறியதற்காக மிகவும் ஆழ்ந்த வருத்தங் கொள்வதையும் விளக்கிக் கூறி, அந்த பாவம் நம்முடைய பொறுப்பில் சுமத்தப்படாமல் இருக்கவும், ஆனால் அது கிறிஸ்துவின் மூலமாக நம்முடைய சுத்திகரிப்புக்காக அவருடைய கிருபையான முன்னேற்பாடு மூலமாக அது துடைத்தழிக்கப்பட வேண்டும் என்றும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளவும், அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்திலேயே நம்முடைய சகல நம்பிக்கையும், உறுதிப் பாடும் இருப்பதை தாழ்மையுடன் தெரிவிக்க வேண்டும்.

நாம் ஒவ்வொரு வீணான வார்த்தைக்கும் நம்முடைய கணக்கை ஒப்புவிக்க வேண்டும்; அத்துடன் நம்முடைய மனந்திரும்புதலின் வார்த்தைகளால், கிறிஸ்துவின் புண்ணியங்களால், சாட்டப்பட்ட விசுவாசத்தினால், நாம் விடுவிக்கப்படுவோம். இல்லையெனில், வீணான வார்த்தை-கள், கர்த்தருக்கு கனவீனத்தை ஏற்படுத்தி, நமக்கு எதிராக நின்று நம்மை குற்றமுள்ளவனாகத் தீர்த்து, அத்துடன் நாம் அதன் பின்விளைவுகளை அனுபவிக்க கடமைப்பட்டவர்-களாவோம். முதல் விளைவு தன்னைத்தானே காயப்படுத்திக் கொள்ளுதலாகும். ஏனெனில் ஈடுபாடு கொண்ட ஒவ்வொரு பொல்லாங்கான எண்ணம் அல்லது வார்த்தை குணாதிச யத்தை கடினப்படுத்தி அநீதிக்கு நேராக அதிகமாக அதைப்பற்றிக் கொள்ளும்படி செய்கிறது. இரண்டாவது விளைவு, அது மற்றவர்களுக்கு தீமையான எடுத்துக் காட்டாக இருந்து, அவர்களிடமுள்ள தீமையைக் கிளறி விடும். "**மெதுவான பிரதியுத்திரம் உக்கிரத்தை மாற்றும்: கடுஞ் சொற்களோ கோபத்தை எழுப்பும்.**" (நீதி. 15:1).

புத்தியீனமான அல்லது அன்பற்ற வார்த்தைகளின் விளைவாக நாம் கஷ்டங்களைத் தூண்டிவிடலாம்; அவை நமக்கு இச்சையடக்கம் மற்றும் மற்றவர்களுடைய உணர்வு-கள் மற்றும் எண்ணங்களை கருத்தில் கொள்ளுதல் ஆகிய பாடத்தை நமக்கு கற்றுத் தருகிற பழிவாங்கும் நீதியின் கருவிகளாக மாறும். நம்முடைய சொந்த தவறுகளின் இயல்பான விளைவுகளாக மட்டுமே இருப்பவைகளை கர்த்தர் (அல்லது பிசாசு) சோதனைகளை அனுப்புவதாக குற்றஞ்சாட்டுவது அடிக்கடி நடக்கிற விஷயமாயிருக்கிறது. அத்துடன், பிரச்சினையின் வேர் இருக்குமிடத்தை

> **நீங்கள் பேசுவதற்கு முன்பு சற்றே நிறுத்தி சிந்தியுங்கள், ஏனெனில் தேவன் கவனித்துக் கொண்டிருக்கிறார்!**
>
> **நீங்கள் பேசின வீணான வார்த்தைகள் ஒவ்வொன்றையும் குறித்து கணக்கொப்புவிக்கவேண்டும்!**
>
> **- மத்தேயு 12:36**

(தங்களிடத்திலேயே) கண்டு கொள்ள தவறுகிறவர்கள் வசனத்துக்கு கீழ்ப்படிவதன் மூலமாகவும் கண்டிப்பான சுயஒழுக்கக் கட்டுப்பாடு மூலமாகவும் தாங்களாகவே தவிர்க்க முடியக் கூடியவைகளை கர்த்தர் அற்புதமாக அகற்ற வேண்டுமென்று வீணாக ஜெபிக்கின்றனர். நம்மை நாமே நிதானித்து அறிந்தால் (சரி செய்து கொண்டால்) நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும் போது, உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம். (நாம் செய்கிற நம்முடைய சொந்த தவறுதல்கள் மூலமாக கிடைத்த அனுபவங்கள் மூலமாகவே பெருமளவில் ஏற்படுகின்றன). (1 கொரி. 11:31,31).

"***உங்களை சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால் உங்களுக்கு பலன் என்ன? பாவிகளும் தங்களை சிநேகிக் கிறவர்களை சிநேகிக்கிறார்களே, உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால் உங்களுக்கு பலன் என்ன? பாவிகளும் அப்படி செய்கிறார்கள்.***" (லூக். 6:32-33).

"**ஏனெனில் தேவன் மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு** (நம்முடைய பாடுகள் சுகந்த வாசனையின் பலியாக தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது) **உபத்திரவங்களைப் பொறுமையாய் சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும். நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும் போது பொறுமையோடே சகித்தால் அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாக பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப் பட்டுமிருக்கிறீர்கள்.....**" (1பேது. 2:19-21).

நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறு-கிறோம். ஒருவன் சொல் தவறாதவனானால், அவன் ஒரு பூரண புருஷனும், தன் சரீரம் முழுவதையும் கடிவாளத்தி னாலே அடக்கிக் கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான். (யாக். 3:2). ஆனால் அப்படிப்பட்ட மனுஷன் ஒருவனும் ஜீவியத்தில் இல்லை. நம்முடைய ஒவ்வொரு எண்ணத் தையும் கிறிஸ்துவின் சித்தத்துக்குள்ளாக சிறைப்படுத்திக் கொண்டு வரவும், கர்த்தருக்கு பயப்படும் பயத்தில் (பயபக்தி) பூரணமான பரிசுத்தத்திற்கும் வருவதற்கும், நாம் தினந் தோறும் முயற்சி செய்கிற அதே வேளையில், நம்முடைய மீட்பரும், பரிந்து பேசுகிறவருமானவரின் புண்ணியத்துக் காக தொடர்ந்தேர்ச்சியாக வேண்டிக் கொள்வதும், நம்மெல் லாருக்கும் அவசியமாயிருக்கிறது.

# தேவபக்திக்கு நேராக பயிற்சி செய்

நாம் உள்ளும் புறம்பும் எல்லா பக்கங்களிலும் எதிரிகளால் சூழ வளைந்து கொள்ளப்பட்டு இருப்பதால் எப்போதுமே ஜாக்கிரதையாயிருந்தாலும், ஆச்சரியப் படத்தக்க வகையில் பாதுகாப்பு இல்லாத நிலையில் நம்மை தூக்கி வீசச் செய்யும் இந்தச் சூழ்நிலையில் விழிப்புட னிருத்தல் என்பது மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. நம்மில் சிலரை பாவம், தப்பறை சுயநலம் மற்றும் உலகதனத்திற்குள்ளாக கொண்டு வரும் பொருட்டு கிறிஸ்தவ போர் வீரர்கள் என்ற வகையில் தேவ பக்தியுடையவர்களாயிருப்பதற்கு - பயிற்சி செய்யும் ஒரு பாகமாக நாம் நம்முடைய பங்கைச் செய்வது மிகவும் அவசியமாயிருக்கிறது. ஆகவே விழிப்புடனிருத்தல் அப்படிப்பட்ட பயிற்சியின் மிக முக்கிய பாகமாக இருக்கிறது. காவலைக் காப்பவர்களாக நாம் நம்முடைய நிலையை ஏற்றுக் கொண்டு, விழிப்புடனிருக்க கூடியவர்களாயிருக்கு-மளவுக்கு நாம் விழித்தெழுந்து காவலாளிகளாக நமக்கு எதிராக வருவதற்கு சாத்தியமான எல்லா வகையான ஆச்சரியமானவைகளுக்கும் எதிராக ஜாக்கிரதையா யிருந்து நம்முடைய மனங்கள், இருதயங்கள் மற்றும் சித்தங்களாகிய முகாம்கள் மீதும், அதைப் போலவே நம்மைத் தாண்டியும், அந்த முகாம்களைத் தாண்டியுமுள்ள பிரதேசங்களின் மீதும் மாறி மாறி, நம்முடைய கண்களை நிறுத்தி, கூடுமான வரையில், இந்த அடையாளமான கூடாரத்திற்குள்ளிருந்து வெளியேறுகிற அல்லது பிரவே-சிக்கிற எதையும் முடிந்த அளவுக்கு ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கக் கூடியவர்களாயிருப்பதை இது குறித்துக் காட்டுகிறது.

தெய்வபக்திக்கு நேராக பயிற்சி செய்வதிலுள்ள இன்னொரு பகுதி ஜெபமாகும். ஜெபத்தில் நாம் தேவனுடைய செவிக்கு நேராக நம்முடைய வாய்களை நிறுத்தி, நம்முடைய தேவைகளைச் சொல்லி அவைகளைச் சந்திப்பதற்காக கேட்டுக் கொள்கிறோம். மிகக் குறுகிய கருத்தில் ஜெபம் என்பது விண்ணப்பம் செய்வது என்று வரையறுக்கப் பட்டுள்ளது. அதன் விரிவான கருத்தில், அது தனக்காகவும் பிறருக்காகவும் வேண்டிக் கொள்ளுதல், பக்தியாயிருத்தல், நன்றி செலுத்துதல், துதித்தல், அறிக்கை செய்தல், விண்ணப்பித்தல், ஆமென் என்ற வார்த்தையை சொல்-வதன் மூலம் அதை நிச்சயப்படுத்துவதையும், உள்ளடக்கி யிருக்கிறது. இது நம்முடைய தேவைகள், தேவனுடைய திறன், நம்முடைய பலவீனங்கள் மற்றும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ஆகியவைகளைப் பற்றிய நம்முடைய உணர்விலிருந்து புறப்பட்டு வருகிறது. அது குறிப்பிடப்பட்ட சமயங்களில் ஏறெடுக்கப்பட வேண்டும், உதாரணமாக: காலையிலும், மாலையிலும், நம் உணவு வேளைகளிலும்; மேலும் முக்கியமாக உபத்திரவங்கள், சோதனைகள், பரீட்சைகள், துன்பங்கள் நிச்சயமில்லாதவைகள், தோல்வி போன்ற பிரத்தியேகமான தேவை நேரங்களிலும், நாம் நமக்காகவும், மற்றவர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். இது தேவனுடைய ஜனங்களின் கூட்டங்களில் கூடி வருகையில் யாவருக்கும் முன்னிலையில் இருக்க வேண்டும். இது நம்முடைய குடும்பங்களிலும், நம்முடைய தனி வாழ்க்கையிலும் இருக்க வேண்டும். அது தெய்வ பக்திக்குரிய பயிற்சியாயிருக்க வேண்டுமெனில் அது விசுவாசம், நம்பிக்கை, அன்பு மற்றும் கீழ்ப்படிதலிலிருந்து வருகிறதாக இருக்க வேண்டும். ஏனெனில் விசுவாசம் தேவனிடமாக உறுதி, நம்பிக்கை, வாஞ்சை ஆகியவற்றி லிருந்து புறப்பட்டு, அவருடைய அனுகூலமான பதில்களை எதிர்பார்க்கிறது. அன்பு அவரிடமாகவும், நாம் யாரை-யெல்லாம் நேசிக்க வேண்டும் என்று அவர் நம்மிடம் விரும்புகிறாரோ அவர்களிடம் புறப்பட்டு செல்லுவதுடன், கீழ்படிதலானது, ஜெபிக்கும் வழக்கத்தைப் பழக்கப்படுத்தி விடுகிறது.

பிரதிஷ்டை செய்தவர்கள் தேவனிடம் ஜெபிக்கும் போது அவரை சிருஷ்டிகராக, கொடுப்பவராக, மீட்பராக, போதகராக, நீதிமானாக்குகிறவராக, பரிசுத்தப்படுத்து-கிறவராக, விடுவிக்கிறவராக மனதில் நினைத்து ஜெபிக்க-லாம், நீதிமானாக்கப்பட்டவர்கள். அவரிடம் சிருஷ்டிகராக, கொடுப்பவராக, மீட்பராக, போதகராக மற்றும் நீதிமானாக்கு பவராக எண்ணி ஜெபிக்கலாம். நீதிமானாக்கப்படாத-வர்களும் கூட, அவரை சிருஷ்டிகராக, அளிப்பவராக மற்றும் மீட்பராக கருதி வேண்டுதல் செய்யலாம், ஏனெனில் அவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுவில் விசுவாசம் வைப்பதற்கு, தங்கள் வழியை மனந்திரும்புதலின் படிகளின் மூலமாகவே நடப்பிக்கின்றனர்.

மேலும் தேவசாயலுள்ளவர்களாக மாறுவதற்கு, நாம் தேவபக்திக்கு நேராக பயிற்சி செய்வதன் ஒரு பகுதியாக, நம்முடைய மனங்கள், இருதயங்கள் மற்றும் சித்தங்களில் தேவ சிந்தனைகளை வைத்து பற்றிக் கொள்ள வேண்டும்; வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், நாம் அவருடைய வேத வார்த்தையைப் படிக்க வேண்டும்; ஏனெனில் அவ்விதத்தில் தான் அவர் தம்முடைய எண்ணங்களை அதாவது நமக்குள்ளும், நாம் நம்முடைய மனங்கள், இருதயங்கள் மற்றும் சித்தங்களுக்குள் வைத்து காத்துக் கொள்ள வேண்டுமென அவர் விரும்பும் கருத்துக்களை வைக்கிறார். அவர் கோட்பாட்டு உபதேசங்கள், புத்திமதிகள், தீர்க்கதரிசனங்கள், வரலாறு மற்றும் அடையாளமான தமது எண்ணங்களை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்; அவைகள் அறிந்துக் கொள்வதற்கு ஏற்ற காலமாய் இருப்பதால் இவைகளைக் குறித்து நாம் தியானிக்க வேண்டுமென்று அவர் விரும்புகின்றார். நாம் தேவ பக்தியுள்ளவர்களாக இருந்தால், நம்முடைய மகிழ்ச்சி கர்த்தருடைய வேதத்தில் இருக்கும்; நாம் இரவும், பகலும் அதில் தியானமாயிருப்போம். (சங். 1:2).

அதைப் படிப்பதற்கு நாம் பயிற்சி செய்வதில் அடிக்கடி அதிக போராட்டங்கள் அவசியப்படுகிறது, ஏனெனில் இந்த ஜீவியத்தின் கவலைகள், உலகத்தின் வெள்ளம் போன்ற பிற சிந்தனைகள் நம்முடைய எண்ணங்களை முழு

ஆதிக்கத்துக்குள் கொண்டு வரவும் நாடி, சுயநலம் மற்றும் உலகத்தனத்தின் மயக்குதல்கள் மற்றும் ஆவிக்குரிய விஷயங்களில் நம் மூளையின் இயல்பான மெத்தனங்கள், இவையாவும் நம்முடைய நினைவுகளை வசனத்திலிருந்து நீக்கிப் போடவும் பிற காரியங்கள் மீது கவனம் செலுத்தவும் ஒட்டு மொத்தமாக சாய்ந்துவிடச் செய்கின்றன. எனவே நாம் ஆர்வத்துடன் அப்படிப்பட்ட படிப்பில் நம்மை பயிற்றுவித்துக் கொண்டு, நன்மையும் உண்மையுமான இருதயங்களில் விதைக்கப்பட்ட வசனம் தெய்வபக்தியாகிய மரத்தை விளைவிக்கிற வித்தாக மாறும்படி செய்ய வேண்டும்.

## தேவபக்திக்கு விழிப்புடனிருத்தல் அவசியமாயிருக்கிறது

**பாவம், தப்பறை, தன்னலம், உலகத்தனம் ஆகியவைகளுக்கு எதிராக எச்சரிக்கையாகவும், காவலிலும் இருக்க வேண்டும்.**

அப்படிப்பட்ட பயிற்சி இல்லாமல் தெய்வபக்தியின் மீதான நம்முடைய பேரார்வங்களை ஒருபோதும் அடைந்து கொள்ள முடியாது, ஏனெனில், வேத வசனமே பரிசுத்தமாக்கப்படுதலுக்கும் தெய்வபக்திக்கும் மகாபெரிய வல்லமைகளில் ஒன்றாக இருக்கிறது. (யோவா. 17:17) விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவ தற்கு அது தேவ பெலனாயிருக்கிறது, (ரோம. 1:16). **அது ஜீவனும்** (ஆற்றலுள்ளது) **வல்லமையுமுள்ளதாக இருக்கிறது.** (எபி. 4:12). அது நம்மை பக்தி விருத்தியடையச் செய்து பரிசுத்தவான்களின் சுதந்தரத்துக்காக ஒளியில் நம்மை சந்திக்கும்படி செய்கிறது. (அப். 20:32). எனவே, அதனை படிப்பதன் மூலமாக, நாம் நம்முடைய மனங்களையும், இருதயங்களையும், அதன் எண்ணங்களால் நிரப்ப வேண்டும்; மேலும் தேவ பக்தியின் தன்மையிடமாக அப்படி நிரப்புகிற பயிற்சியானது தேவனுடைய எண்ணங்களைப் பற்றி சிந்திப்பதை உள்ளடக்கியிருக்கிறது. அப்படிப்பட்ட பயிற்சியில், வசனத்தை நேசிப்பதன் மூலமாக, அதன் மீது நம்முடைய கவனத்தை ஒருமுகப்படுத்துதலும், அதனுடன் தொடர்புள்ள பல்வேறான பகுதிகளை ஒப்பிட்டுப் பார்த்தலும், அதைப் போலவே நம்முடைய மனக் கண்களுக்கு முன்பாக வேறுபாடுள்ளதாகக் காட்டுகிற அவற்றின் அந்த பகுதிகளை வேறுபடுத்தி பார்ப்பதிலும் நமக்கு உதவிகள் கிடைக்கும், எல்லா சமயங்களிலும் அப்படிப்பட்ட வேத ஆராய்ச்சி – பயிற்சி செய்யப்படும்பொழுது நமக்கு தெளிவுபடுத்துவதற்காக தெய்வீகமாக அருளப்பட்டுள்ள உதவிகளை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேவ பக்தியைப் பயிற்சி செய்வதன் இன்னொரு பாகம் சத்தியத்தைப் பரப்புதல் ஆகும். சிலர் வசனத்தை பெரும்பாலும் தங்களுடைய பிரத்தியேகமான பயன்பாட்டுக்–குரியது என்று நினைத்து பயன்படுத்துகிறார்கள். அதாவது அதை வைத்து மகிழ்ச்சியடைகிறார்கள், அதை மகத்தான–தாகவும், நன்மையானதாகவும் எண்ணி, அதைப் படிப்பதில் அதிக நேரம் செலவழிக்கிறார்கள்; அதைப்பற்றி தங்கள் வீடுகளிலும், தங்களுடைய எக்லீஷியா கூட்டங்களிலும் பேசுகிறார்கள், ஆனால் தங்களுக்கே அதை வைத்துக் கொள்வார்கள். சில சமயங்களில் அவர்கள் அநேக ஏமாற்றங்களைச் சந்தித்தும், துன்பங்களை அனுபவித்தும் வெளியாட்களைப் பொறுத்த வரையில், பல தடைகளைச் சந்திக்கிற நத்தையைப் போல தங்கள் ஓடுகளுக்குள்ளேயே அவர்கள் சுருண்டு கொண்டிருக்கின்றனர். இவ்வாறாக அவர்கள் வெளிச்சத்தை மற்றவர்களுக்கு பிரகாசிக்கச் செய்வதற்கு பதிலாக, அவர்கள் மரக்காலின் கீழ் தங்கள் வெளிச்சத்தை மறைத்துக் கொண்டார்கள். அதனால் வேறுமுறையில் இருளில் இருப்பவர்களாகிய மற்றவர்கள், தங்களுடைய வெளிச்சத்தில் வெளிச்சம் காண்கிறார்கள், இவர்கள், சத்தியம் என்பது புனிதமான உக்கிராணப் பொறுப்புள்ளதாயிருக்கிறது என்பதை மறந்து விடுகின் றனர். அது அவர்களுக்கு கொடுக்கிற சந்தோஷங்களோடு கூட, கூடுதலாக தேவனுடைய உள்நோக்கத்தினால், அவர்கள் அதன் சந்தோஷங்களை அதைப் பெற்றிராத ஆனால், அதனால் ஆசீர்வதிக்கப்பட வேண்டியவர்க ளாயிருக்கிற மற்றவர்களுக்குக் பகிர்ந்து கொடுக்க வேண்டிய தாயிருக்கிறது. ஒரு குடும்பத்தின் தலையாயிருக்கிற இந்த சகோதரர்கள் தான், கர்த்தரிடம், "நான் என் மனைவி, என் மகன் ஜான் மற்றும் அவனது மனைவி ஆகிய எங்கள் நான்கு பேரையும் மட்டும் ஆசீர்வதியும், வேறு யாரையும் ஆசீர்வதிக்க வேண்டாம்" என்று ஜெபிக்கின்றனர். அவர்கள் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளாத வரையில், கர்த்தருடைய முன்னேற்றமடைந்து வரும் வெளிச்சம் அவர்களை குறிப்பிடத்தக்க அளவிலான இருளில் தள்ளிவிடும் என்பது நிச்சயம்.

கர்த்தர் நம்மை சத்தியத்தால் ஆசீர்வதிப்பதில் பிரியப்படுகிறார், அந்த ஆசீர்வாதத்தை நாம் அனுபவிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பது உண்மை–தான். ஆனால் சத்தியமானது நம்மைப் போலவே மற்றவர்களுக்காகவும் உரியது என்று முன்னரே திட்டமிடப் பட்டிருக்கிறது என்பதை அவர் அறிவார். மேலும் அவர் நம் மீது சத்தியத்தை பொழிந்தருள்வது நம்முடைய சந்தோஷத்–துக்காக மட்டுமல்ல, ஆனால் ஆசீர்வதிக்கப்பட வேண்டிய நிலைமையில் இருக்கிற மற்றவர்களை ஆசீர்வதிக்க பயன்படுத்தப்பட வேண்டிய உக்கிராணப் பொறுப்புள்ள தாகவும்கூட இருக்கிறது என்பதை அவர் அறிந்திருக்கிறார். எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ, அவனுக்கு தண்ணீர் பாய்ச்சப்படும், வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு என்பதை அவர் அறிந்திருக்கிறார். ஆகையால் சத்தியத்தால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், பதிலுக்கு நாம் மற்றவர்களையும், தங்களுடைய சொந்த வளர்ச்சிக்காகவும், பிறருடைய நலன்களுக்காகவும் ஆசீர்வதிக்க வேண்டும் என்று அவர் காரியங்களை ஒழுங்கு செய்திருக்கிறார். எனவே சத்தியத்தைப் பரப்புவது, ஒருவரை தேவபக்திக்கென்று பயிற்சி செய்வதன் ஒரு பாகமாயிருக்கிறது. இது திட்டவட்டமான வெளிப்படையான உண்மையாயிருக்கிறது; அப்படிப்பட்ட பயிற்சி நம்மை சத்திய அறிவிலும், அதை எடுத்துச் செல்லும் திறமையிலும் வளரச் செய்கிறது.

தேவபக்திக்கென்று நாம் நம்மை பயிற்சி செய்வதில் இன்னும் ஒரு காரியம் இருக்கிறது. அது சத்தியத்துக்கு இசைவாக, குணாதிசயத்தை வளர்த்துக் கொள்வதாகும். நாம் வளர்த்துக் கொள்ள வேண்டியதாக தேவன் நம்மிடத்தில் விரும்புகிற குணாம்சம் தேவனுடையதும், கிறிஸ்துவினுடையதுமாகும். (மத். 5:45,48; ரோம. 8:29; 2 கொரி. 3:18). இது, நாம் பரத்துக்குரியதும், மேலானதுமான பற்றுகளையும் அதைப் போலவே பரத்துக்குரியதும், மேலானதுமான மனதையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துகிறது. ஏனெனில் அப்படிப்பட்ட வளர்ச்சி நம்மை தேவனுடைய மற்றும் கிறிஸ்துவினுடைய குணாம்சங்களுக்கு ஒத்ததாகச் செய்கிறது. அப்படிப்பட்ட குணாதிசயத்தை அடைந்து கொள்வதே கிறிஸ்தவ ஜீவியத்தில் மிகவும் முக்கியமான விஷயமாயிருக்கிறது. ஆம், அது இல்லாமல், தேவ பக்திக்குரியதான ஒவ்வொரு பிறகாரியங்களும் வீணானதாயிருக்கிறது. (1 கொரி. 13:1-3). ஆகவே, தேவபக்திக்கு ஏதுவான நம்முடைய எல்லா பயிற்சிகளுடனும் நாம் இதனை ஒரு தவிர்க்க முடியாத காரியமாக பெற்றுக் கொள்வோமாக. நிச்சயமாகவே, மற்றவைகள் இதற்கு துணையாக நிற்பவைகளே ஆகும். தேவ பக்திக்குரிய தன்மைகளாக நாம் இதுவரை விவாதித்த காரியங்களில் இந்த ஒன்று மிக முக்கியமானதாயிருப்பது மட்டுமல்லாமல், இது கைக்கொள்வதற்கு மிகவும் கஷ்டமானதாகவும், மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டியதாகவும், மேலும் இது அடிக்கடி பயிற்சி செய்யப்பட வேண்டும் என்று குறிக்கப்பட்ட ஒரு காரியமாகவும் இருக்கிறது.

### தேவபக்திக்கு பயிற்சி செய்தல் அவசியமாயிருக்கிறது

**உதவிகரமான வழிமுறைகள் - விழிப்புடனிருத்தல், ஜெபித்தல், படித்தல், தேவனுடைய ஆவி, வார்த்தை மற்றும் பரிபாலனத்தில் விசுவாசமாயிருத்தல், அதை அடைந்து கொள்ள நம்பிக்கையுடனும் அன்புடனும் இருத்தல் தொடர்ந்தேர்ச்சியான தீர்மானத்துடனிருத்தல் ஆகியவைகளே.**

ஜீவியத்தின் ஒவ்வொரு தொடர்பிலும், அனுபவத்திலும் இது பயிற்சி செய்யப்படக் கூடியதாயிருக்கிறது. அதற்கு உதவியாக இருக்கும் வழிமுறைகள் என்னவெனில்: விழிப்புடனிருத்தல், ஜெபித்தல், தேவனுடைய ஆவி, வசனம் மற்றும் பரிபாலனத்தில் விசுவாசத்துடனிருத்தல், அதை அடைந்து கொள்வதில் நம்பிக்கையுடனும் அன்புடனுமிருத்தல், அவற்றின் மீது தொடர்ந்தேர்ச்சியான தீர்மானத்துடனிருத்தல் ஆகியவைகளாகும். அதை அடைந்து கொள்ள விசேஷித்த வழிமுறைகளும் இருக்கின்றன என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். அவைகள் மனம், இருதயம் மற்றும் சித்தத்தை வசனத்தின் செல்வாக்கின் கீழ் அடக்குவதும், தேவனுடைய மற்றும் கிறிஸ்துவினுடைய குணாதிசயங்களை அப்படியே பின்பற்றுவதும், நம் பற்றுகளை பரம காரியங்கள் மற்றும் மேலானவைகளுடன் இணைத்துக் கொள்ளுதல், நம்முடைய மனம் இருதயம் மற்றும் சித்தத்தை கர்த்தருடைய சித்தத்துக்கு அடிமைப்படுத்துவது ஆகியவைகளாகும்.

### தேவபக்திக்கு, தேவனுடைய எண்ணங்களை நம்முடைய மனங்களிலும் இருதயங்களிலும், சித்தங்களிலும் வைப்பது அவசியமாகிறது

**வசனத்தின் செல்வாக்கினால் இயக்கப்பட்டு, தேவனுடைய மற்றும் கிறிஸ்துவினுடைய குணாதிசயங்களைப் பிரதிபலித்து, கர்த்தருடைய சித்தத்தைச் செய்ய முயற்சித்து தீமையின் எல்லா வடிவங்களையும் தோற்கடித்து ஜீவிப்பதாகும்.**

தேவனைப் போன்ற, கிறிஸ்துவைப் போன்ற குணாதிசயத்தை நாம் வளர்த்துக் கொள்வதில் ஒரு பகுதி, நம்மிலுள்ள சீர்கேட்டிலிருந்து மீண்டு வருதாகும். கூடுதலாக சில குறிப்பிட்ட விசேஷ வழிமுறைகளையும்கூட பயன்படுத்துவது, தீமையான காரியங்களை விட்டுத் திரும்பும் போது, அப்படிப்பட்ட சீர்கேடான நிலையை மேற்கொள்ள உதவிகரமாக இருப்பதை மெய்ப்பிக்கிறது; உதாரணமாக: தீமையில் இருந்து நம்முடைய பற்றுகளைப் பிரிப்பது, தீமையிலிருந்து வசனத்தால் சுத்திகரித்தல், பொல்லாங்கை தவிர்த்து அருவருப்பது, தீமையிலிருந்து கவனத்தை திருப்புதல், பொல்லாங்கை அகற்றி, அதற்கு எதிரான நன்மையால் நிரப்புதல், தீமைக்கு எதிரான நன்மைகளால் தீமையை எதிர்த்தல், எதுவும் நுழைய முடியாத ஒரு இருதயம் மனம் மற்றும் சித்தத்தை தீமைக்கு எதிராக முன் வைத்தல் ஆகியவைகளாகும். இந்த முறைகளை உண்மையுடன் பயன்படுத்தி, நம்முடைய பல்வேறான சூழ்நிலைகள், அவசியங்கள் மற்றும் அனுபவங்களுக்கும் ஏற்றுவாறு உபயோகப்படுத்தப்படுவது தேவ சாயலிலும், கிறிஸ்துவின் சாயலிலும் நம்மை வளர்ப்பதில் மிகவும் உதவிகரமாயிருப்பதை நிரூபிக்கும். எனவே நாம் இந்த முறையில் தேவபக்திக்கு நேராக நம்மை பயிற்றுவிப்பதில் எல்லா ஜாக்கிரதையுடனும் ஈடுபடுவோமாக,

## வேதாகமத்தை ஆராய்ந்து படிப்பதற்கான நட்பான குறிப்புகள்

நம்முடைய மீட்பர் தம்முடைய சீஷர்களுக்காக, "**உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்:**" என்று ஜெபித்து அதன் பின்பு, "**உம்முடைய வசனமே சத்தியம்**" என்றும் சேர்த்துக் கூறினார். (யோவா. 17:17). அவர் இவ்வாறாக பொதுவான ஒரு கோட்பாட்டை நமக்கு எடுத்துக் கூறி, நிரூபித்துக் காட்டும் ஒரு அனுபவத்தை, அதாவது தேவனுடைய சத்தியமே, தம்முடைய பிள்ளைகளை அபிவிருத்தியடையச் செய்வதற்கான அவருடைய பிரதிநிதியாக இருக்கிறது என்பதைக் காண்பிக்கிறார். தாவரவியல், வான சாஸ்திரம் போன்ற பொதுவான உண்மைகள் எவ்வளவுக்கு நன்றாகவும், அழகாகவும் இருந்தாலும், அவைகள் அல்ல; ஆனால் தேவன் தம்முடைய வசனத்தில் வெளிப்படுத்தியிருக்கிற சத்தியங்களே அவருடைய

பிள்ளைகளை வளர்ச்சியடையச் செய்யும். நாம் இருதயப் பூர்வமாக அவற்றை ஏற்றுக் கொள்வோமானால், அவை நம்மில் சத்திய ஆவியாகிய தேவனுடைய ஆவியின் கிருபைகளை உருவாக்கும் இயல்புடையதாயிருக்கிறது.

ஆனால் இப்பொழுது இந்த கேள்விகள் எழும்புகின்றன: "தேவனுடைய சத்தியம் என்பது என்ன?" "தேவனுடைய வார்த்தை என்பது என்ன? ஏனெனில் நம்முடைய கர்த்தர், உம்முடைய வசனமே சத்தியம் என்று சொன்ன போது புதிய ஏற்பாடு எழுதப்படவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நாம் நம்முடைய தொடக்க வேத வாக்கியத்துக்கு திரும்ப வருகிறோம்; சங். 119:160 – **உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம்; உம்முடைய நீதி நியாயமெல்லாம்** (நிலைத்திருக்கும்) **நித்தியம்**" (ASV, ரோதர்காம்). நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசிகளும் (பழைய ஏற்பாடு) மட்டுமே, நம்மை பரிசுத்தப்படுத்துவதற்கு ஏற்றதாகவும் உரியதாகவும் கருதப்பட வேண்டும் என்று நம்முடைய கர்த்தர் அர்த்தப்படுத்தியதாக புரிந்துக் கொள்ளப்படக்கூடாது. ஆனால் மாறாக தீர்க்கதரிசிகளால் எழுதப்பட வேண்டியதாயிருந்ததற்கு தேவன் காரணமாக இருந்ததும், அதோடு கூட அந்த பழைய ஏற்பாட்டு எழுத்துக்கள் பற்றிய விளக்கங்களையெல்லாம் கிறிஸ்துவின் போதனைகள் மூலமாகவும், அதன்பின்பு அப்போஸ்தலர்களுடைய எழுத்துக்கள் மூலமாகவும் தேவன் கொடுத்த தேவனுடைய வார்த்தையாகவும், அவை சத்திய வெளிப்பாடுகளாகவும், அவைகளை விசுவாசித்து அதன்படி நடக்கிறவர்களை பரிசுத்தப்படுத்துபவையாகவும் மதிக்கப்பட வேண்டியதாயிருந்தது. இதை அவர், "**என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பினவருடையதா–யிருக்கிறது**" என்று அவர் அறிவித்த போது அவர் தெளிவாக வெளிப்படுத்தினார். "**நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.**" "**இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்கு சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்: ...அவர் வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.**" (யோவா. 7:16; 6:63; 16:12,13).

எனவே, உடனடியாக, அநேகருடைய கருத்தாக, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் யாவும் நிறைவேறி விட்டது என்றும், இப்போது பயபக்தியுடன் படிப்பதற்கு அது தகுதியில்லாதது என்றும் அநேகர் கருதுவது மிகப்பெரிய தவறாக – அதாவது மிகவும் ஆபத்தான தவறாகவும் காணப்படுகிறது, ஏனெனில் அது அநேகரை அங்கே வெளிப்படுத்தப்பட்டுள்ள மிகப்பெரிதும், அழகானதுமான வாக்குத்தத்தங்களை அறிந்து கொள்ள முடியாதபடிக்கு குருடாக்கியிருக்கிறது. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் இன்னும் எதிர்காலத்துக்குரியவைகளும், மெய்யான கிறிஸ்தவர்களின் விசுவாசம் மற்றும் நம்பிக்கையுடன் மிக முக்கியமாக இணைந்திருப்பதுமாக இருக்கிறது. மேலும் பரிசுத்தமாக்கப்படுதலை நிறைவு செய்வதற்கும் அவைகள் அத்தியாவசியமானதாக இருக்கிறது.


அவைகளில் மிக பிரதானமானவைகளில் முதலாவது காரியம் கிறிஸ்துவின் ஆயிரவருட ராஜ்யத்தைப் பற்றிய வாக்குத்தத்தங்களும், உலக மனுக்குலத்தாருக்குரிய மிகச் சிறந்த ஆசீர்வாதங்களாகவும், பூமி மனுஷனுடைய எதிர்கால வசிப்பிடமாகவும், மனப் பூர்வமாக கீழப்படிகிறவர்களுக்கு பிரியமான எதிர்கால வாய்ப்பும் ஏராளமான செழிப்பும், வசதிகள் மற்றும் சௌகரியங்கள் ஆகியவைகளும் சேர்க்கப்படும். இரண்டாவதாக, தேவ தயவுக்கு திரும்பி வந்து சேர்ந்த இஸ்ரயேலுக்கான வாக்குத்தத்தங்களும், மனுக்குலத்தாரை ஆசீர்வதிக்கும் ஆயிரம் வருட வேலையில் பங்கடைவதும் (குற்றுக் கொடுத்தல், ஆளுகை செய்து தூக்கி உயர்த்துதல்) ஆதிப்பிதாக்கள் பூரண மனுஷராக ஜீவனைப் பெற்றுக் கொள்ள திரும்ப கொண்டு வரப்படுவார்கள் என்றும், பூரணமான மனிதன் எப்படியிருப்பான் என்பதற்கும், விழுந்துபோன மனுக்குலத்தார் எல்லாரும் அப்போது தமது சபையோடுகூட பூமியின் ஆட்சியாளராகிய கர்த்தராகிய இயேசுவுக்கு கீழ்ப்படிவதன் மூலமாக அதைப் பெற்றுக் கொள்வார்கள் என்பதற்கும் சிறந்த உதாரணங்களாக இருப்பார்கள். (அப். 3:19-22; 7:37; 1கொரி. 6:2).


உண்மையாகவே, மிகப்பெரிய அளவில் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களைப் பாராட்ட தவறுவதன் காரணமாகவே, தேவனுடைய பிள்ளைகளில் அநேகம் பேர் புதிய ஏற்பாட்டின் போதனைகள் எல்லாவற்றிலும் கிறிஸ்தவ மண்டலத்தின் முரண்பாடான மதக்கோட்பாடுகளால் எடுத்துக்காட்டப்படுகிறபடி மிக வருந்தத்தக்க வகையில் கலந்து விட்டனர், அப்போஸ்தலர்கள் தொடர்ச்சியாக அடிக்கடி தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களைச் சுட்டிக்காட்டி வந்ததுடன் அவைகளை வியாக்கியானம் பண்ணி, அந்த அடிப்படையிலேயே பகுத்து ஆராய்ந்து பார்த்தார்கள் (உதாரணமாக இவ்வசனங்களைக் கவனியுங்கள்: அப். 2:24-32; 3:19-22; ரோம. 11:2,8,9; கலா. 3).

தீர்க்கதரிசனங்களிலிருந்து தான் அவர்கள் கண்ட–றிந்து, தற்கால யுகத்தில் கர்த்தருடைய சித்தத்தைக் குறித்ததான முடிவுகளைச் சொல்லி, அவருடைய எதிர்கால நோக்கங்களையும் அறிவித்தனர். (ரோம. 11:25-32; அப். 15:14-16 பார்க்கவும்). ஆகவே பழைய ஏற்பாட்டை புறக்கணிக்கிறவர்கள் முன்னதாக வெளிப்படுத்தப் பட்டவைகளை அடிப்படையாக கொண்டிருக்கிற புதிய ஏற்பாட்டின் விஷயங்களை மங்கலாகவே புரிந்துக் கொள்ள முடியும் என்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## உதவி தேவைப்படுகிறது

நீங்கள் அறிவுத்திறன் மிகுந்து, பிரகாசமும், மிகச்சிறந்த அளவில் பகுத்தறிவும், அதைப் பிரதிபலிக்கிற ஆற்றல்களும், நல்ல கல்வித்திறனும் பெற்றவர்களாயிருந்தால், நீங்கள் வேதாகமத்தை எடுத்துக் கொண்டு,



வருடக் கணக்காக பொறுமையுடன் ஆராய்ச்சி செய்யும் நோக்கில் படித்தால், உங்களுடைய திருப்திக்கு அதன் தேவ ஏவுதலையும், மகத்து-வத்தையும் அதன் உள்ளும் புறம்பும் உள்ள ஆதாரத்திலிருந்து, நீங்கள் மெய்ப்பித்து காட்டி, அதன் ஞானத்தையும், சத்தியத்தையும் அதிக அளவில் அடைந்து கொள்ளலாம். ஆனால் நீங்கள் இந்த நன்மைகளை-யெல்லாம் பெற்றிருக்கிறீர்களா? அப்படியானால் அவை-களின் உபயோகத்திற்கு தேவைப்பட்ட இத்தனை வருட காலத்தை உங்கள் கட்டுப்பாட்டின்கீழ் பெற்றிருந்தீர்களா? வாஞ்சையுடன் சத்தியத்தைத் தேடுகிறவர்களில் பெரும்-பாலானோர் அப்படி பெற்றிருக்கவில்லை; மேலும் அவர்கள் எல்லாவற்றையும் பெற்றிருந்தாலும் கூட, ஒவ்வொருவரும் மற்றொருவரை சார்ந்திராமல் இந்த விஷயத்தை தனித்தனியாக படிப்பது, நேரத்தை வீணாக்குவதா யிருக்காதா? நாங்கள் பிற அறிவியல்களில் காரியங்களில் அப்படி நேரத்தை வீணாக்குவதில்லை, ஆனால் மற்ற ஒவ்வொருவரின் ஒத்தாசையையும் பயன்படுத்திக் கொள்கிறோம். ஆயினும் எங்களால் முடிந்த அளவுக்கு தர்க்கதரீதியான சிறந்த அறிவுத் திறனோடுகூட நாங்கள் ஏற்றுக் கொள்கிறதை மெய்ப்பிக்காமல் அங்கீகரிப்பதில்லை. அதைப் போலவே நாம் வேதாகம ஆராய்ச்சியிலும் நாம் செய்ய வேண்டும். மேலும் நாங்கள் இப்படித்தான் செய்ய வேண்டும் என்பது தெளிவான கர்த்தருடைய சித்தமாயிருக் கிறது, ஏனெனில் சபையின் பல்வேறு அங்கத்தினர்கள், ஒருவர் மீது ஒருவர் பரஸ்பரம் சார்ந்திருத்தலை, அவர் அப்போஸ்தலன் பவுல் மூலமாகத் தெரியப்படுத்துகிறார், ஆனாலும் சிலர் சரீரத்துக்கு கண்ணாகவோ அல்லது வலது கரமான அங்கத்தினர்களாகவோ விசேஷமாக பயனுள்ள-வர்களாக இருப்பார்கள். (1 கொரி. 12:14-21). தேவனுடைய தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரங்களான: ரசல் போதகர், ஜான்சன் போதகர் மற்றும் ஜாலி போதகர் ஆகியோர் தங்கள் விசேஷ உதவியாளர்களுடன் எழுதியுள்ள வார்த்தைக ளிலிருந்து நாம் தொடர்ந்து பெற்றுக் கொள்கிற ஒத்தாசைக்காக நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ஆயிர வருட நாள் விடியும் வரைக்கும், சாந்த குணமுள்ளவர்கள் மட்டுமே போதிக்கப்படுவார்கள், அவர்களே தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடப்பவர்கள் ஆவர். வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தை-யென்றும், அவருடைய பிள்ளைகளுக்கு வழி காட்டியாயிருக் கும்படியாக அவை கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் திருப்தியடைகிறார்கள். "**சாந்தகுணமுள்ளவர்களை நியாயத் திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்கு தமது வழியைப் போதிக்கிறார்.**" (சங். 25:9). ஏனெனில் "**தேவன் பெருமை-யுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்-களுக்கோ கிருபை அளிக்கிறார்.**" (யாக். 4:6). அப்படிப்பட்ட-வர்கள் எல்லோருமே அப்பொழுது, "**தேவனால் போதிக்கப் பட்டவர்களாக**" இருப்பார்கள் மற்றவர்களோ தேவனுடைய வார்த்தையைப் புரிந்து கொள்ளத் தவறிவிடுவார்கள்; ஏனெனில் அவர் அதை அப்படித்தான் ஏற்பாடு செய்திருக்கிறார். (தானி. 12:10; மத். 13:10,11). பிரதிஷ்டை செய்தவர்கள், "**நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும்..... உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி கற்றுக்கொள்**(study)" என்று அப்போஸ்தலன் பவுலினால் விசேஷமாக உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். 2 தீமோ. 2:15.

## சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதித்தல் 2 தீமோ. 2:15

சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிப்பது கடினமானதும், தொடர்ந்து நீடித்து உழைக்க வேண்டிய வேலையும், விலையேறப்பெற்ற வருடங்களைச் செல-வழிக்க வேண்டியதுமாயிருக்கிறது. தி பைபிள் ஸ்டாண்டர்ட் மினிஸ்ட்ரீஸ் (LHMM)-ல் பயிலும் மாணாக்கர் யுகங்களைப் பற்றி அவற்றின் விசேஷ அம்சங்களோடு புரிந்து கொள்ளும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்; அப்பொழுதிருந்த உலகம், ஆதி பிதாக்களின் யுகம், யூத யுகம், சுவிசேஷ யுகம், ஆயிர வருட யுகம், வரப்போகிற யுகங்கள் மற்றும் இந்த யுகங்களினூடாக தேவன் படிப்படியாக பூரணப்படுத்தி வருகிற வேலையைப் பார்க்கிறார். இந்த அறிவுடன் பல்வேறான யுகங்கள் மற்றும் நேமகங்கள் பற்றிய சரியான புரிந்து கொள்ளுதலுக்காக, தேவனுடைய சத்திய வசனம் நிதானமாய் பகுத்து போதிக்கப்படுகிறது. பல்வேறான யுகங்களைப் பற்றிய அறிவு தெளிவாக மனதில் இருக்கும் போதும், அவைகள் பற்றியதான தேவனுடைய திட்டம் ஒருமுறை பார்க்கப்படும் போதும், வேதாகமம் மனத் தாழ்மையுள்ள மாணாக்கருக்கு முன்பாக ஒரு திறந்த புத்தமாக மாறுகிறது - சத்தியமும், கிருபையும் நிறைந்த

மகாபெரிய பொக்கிஷ வீடாகவும், அதன் ஒவ்வொரு வாக்கியமும் திட்டவட்டமாக அமையப் பெற்றுள்ளதாகவும் காணப்படக் கூடியதாக இருக்கிறது. மேலும் அதன் சரியான காலம், கடந்த காலம், நிகழ்காலம் அல்லது எதிர்காலம் ஆகிய அந்தந்த காலத்திற்கேற்றபடி சரியாக பொருத்திப் பார்க்கும் போது, ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரையுள்ள மொத்த பதிவுகளும் இசைவாக இருப்பதை அறிந்து கொள்ளலாம். நன்கு கூர்மையாக்கப் பட்ட தேவனுடைய வசனமாகிய நம்முடைய ஆவியின் பட்டயத்தை நாம் காத்துக் கொள்வோமாக.

வேதாகமத்தைப் படிப்பது மனதில் ஜெபத்துடன் கூடிய மனப்பான்மையுடன் செய்யப்பட வேண்டியதே அல்லாமல், ஒரு போதும் வேறு எவ்விதத்திலும் முயற்சிக்கப்படக் கூடாது. நமது இருதயங்களும் ஜீவியங்களும் நம்முடைய தேவனுடன் எந்த அளவில் பரிவு மற்றும் ஐக்கியத்திற்குள்ளாக நெருங்கி வருகிறதோ, அந்த அளவுக்கு அதிகமாக நாம் சத்தியத்தை அதிகமாக ஏற்றுக் கொள்ளும் திறமையு டையவர்களாகவும், அதைப் புரிந்து கொள்ள அதிக ஆயத்தமுள்ளவர்களாகவும் இருப்போம் என்பது நினைவு கூரப்பட வேண்டும். ஆகையால் வேதாகமத்தைப் படிக்கும் போது இடைவிடாமல் ஜெபிப்போமாக; நீங்கள் காணக்கூடிய ஒவ்வொரு விதமான சத்தியத்திற்காகவும் உங்கள் இருதயங்கள் தொடர்ந்து கர்த்தருக்கு நன்றி செலுத்தட்டும். உங்களை சத்தியத்திடமாக வழிநடத்தி அதைத் தெளிவு-படுத்தியது யார் அல்லது அவருடைய உதவும் கரம் எதுவாக இருந்து வந்திருந்தாலும் அதைப் பொருட்படுத்த வேண்டாம்; தேவன் வெளிப்படுத்த வேண்டியதாயிருக்கும் எல்லாவற் றையும் அறிந்து கொள்ள எப்போதும் வாஞ்சையுடன் இருப்பீர்களாக. உங்கள் மனம் எளிமையிலிருந்து விலகி தவறான எண்ணங் கொள்ளாதபடி உங்களைக் காத்துக் கொள்ளவும் எச்சரிக்கையுடன் இருங்கள். அதோடு கூட, தவறான எண்ணம் மற்றும் தேவனுடைய சூரிய வெளிச் சத்திற்குள்ளாக வந்த பின்பும், எந்த ஒரு மனுஷன் அல்லது மனுஷி அல்லது உபதேசத்தின் மூலமாக சாத்தான் உங்களை வஞ்சியாதபடிக்கும் பாருங்கள். நம்முடைய தொடர்ச்சியான ஜெபம் இருக்க வேண்டிய விதமாவது: கர்த்தாவே நீரே என்னுடைய போதகராயிரும், எனக்கு பாடங்கள் கற்றுக் கொடுப்பதற்கு நீர் யாரை அல்லது எதை பயன்படுத்துவது உமக்கு சித்தமோ அவர்களையே பயன்படுத்தும். நாம் என்ன விசுவாசிக்கிறோம், அதை ஏன் விசுவாசிக்கிறோம் என்பதும், நாம் பேசுகிற வார்த்தைகள் நம்முடைய குணாம்சத்தை சுட்டிக் காட்டுகிறது என்பதையும் அறிந்து கொள்வது பிரதிஷ்டை செய்த பிள்ளையின் சிலாக்கியம் மற்றும் கடமையாக இருக்கிறது.

நம்முடைய வார்த்தைகள் எல்லாம் நம்முடைய இருதயத்தைச் சுட்டிக் காட்டுவதாக கர்த்தரால் எடுத்துக் கொள்ளப்படுகிறது. நம்முடைய சொற்கள் கலகம் விளைவிப்பவைகளாக அல்லது நேர்மையற்றவைகளாக அல்லது அற்பமானவைகளாக அல்லது அர்த்த

**"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும்... உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி கற்றுக்கொள்**(study)"

**2 தீமோத்தேயு 2:15**(KJV)



மற்றவையாக அல்லது பொறுப்பற்றவைகளாக அல்லது இரக்கமற்றவைகளாக, நன்றியற்றவைகளாக, பரிசுத்த-மற்றவைகளாக அல்லது அசுத்தமானதாக இருக்குமா னால், இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்ற கோட்பாட்டின்படியே இருதயமானது நியாயந்தீர்க்கப் படுகிறது. நம்முடைய வார்த்தைகள் நம்முடைய அன்றாட ஜீவியத்தின் எல்லா பல்வேறான சூழ்நிலைகளிலும், தேவனுக்கு முன்பாக நம்முடைய இருதயங்களின் நிலைபற்றி தொடர்ந்தேர்ச்சியாக சாட்சி பகர்வதாய் இருக்கின்றன. எனவே நம் கர்த்தருடைய வார்த்தைகள் இந்த விஷயத்தைப் பற்றிய நோக்கில் பிர. 5:2-ல்; "**தேவ சமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம் பதறி ஒரு வார்த்தையும் சொல்லாமலும் இரு (மேலும் சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும், வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.**" எபி. 4:13) என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும் என்பது எவ்வளவு சரியான நேரத்திற்குரிய எச்சரிப்பாக இருக்கிறது. ஏனெனில் தேவன் (நம்முடைய நியாயாதிபதி) வானத்திலிருக்கிறார். (சிங்காசனத்தின் மீது) நீ பூமியிலிருக்கிறாய் (நீதியின் செங்கோலுக்கு முன்பாக பரீட்சையின் கீழ்); ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக. அவைகள் தேவனுக்கு முன்பாக கருத்துள்ளதாயும், ஞானமுள்ளதாயும் சொல்லப்பட்டதாக இருக்க வேண்டும். துடுக்குத் தனமாகவோ, பதறியோ, புத்தியீனமாகவோ சொல்லப்பட்டதாக இருக்கக் கூடாது.

மீண்டும் நம்முடைய வார்த்தைகளினால் ஏற்படுகிற பொறுப்பைப் பற்றிய கர்த்தருடைய வாக்கியத்துடன் இசைவாக வசனங்களையும், நாங்கள் தருகிறோம்; "**தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான். தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்**" (நீதி. 13:3) என்றும் கூட எழுதப்பட்டிருக்கிறது. பொல்லாங் கான வழியில் அல்லது பொறுப்பற்ற வழியில் பேசுகிற நாவுடன் எப்படிப்பட்ட பயங்கரமான பொறுப்புணர்ச்சி இணைந்திருக்கிறது. இதுவும் கூட தேவனுக்கு கனவீனத்தை ஏற்படுத்துகிறது: மேலும் "**ஆகையால் தெளிந்த புத்தியுள்ள-வர்களாயிருந்து ஜெபம் பண்ணுகிறதற்கு ஜாக்கிரதையா யிருங்கள்**" (1 பேது. 4:7; 1:13; 5:8) என்ற அப்.பேதுருவின் தடை உத்தரவு எவ்வளவு அவசியமானதாய் இருக்கிறது!

1940-ல் ஜான்சன் போதகருக்கு அனுப்பப்பட்ட ஒரு கடிதத்தை நாங்கள் உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறோம். பால்.S.L. ஜான்சன் என்னுடைய ஏழ்மையான, வஞ்சனை-யுள்ள, நெறி தவறிய, தாழ்ந்த, அறிவாற்றலில்லாத

மனுஷனே:- ஒரு நல்ல பிரஸ்பிட்டேரியனாக பிறந்து (அவர் இப்பொழுது ஒரு ரோமானியன்), உங்களுடைய எண்.121, ஜூலை 15 பத்திரிக்கையைப் படித்த பிறகு நான் உங்களுக்குச் சொல்லியாக வேண்டியது: நீங்கள் இழிவாகவும், அநேகமாக கிண்டலாகவும் நம்பச் செய்கிற தேவன் உண்மையிலேயே இருப்பாரானால் அவர் உங்களுடைய வழுவிப் போகிற ஆத்துமாவை, நீங்கள் செய்கிற தீமையினிமித்தம் நித்தியமாக சபிக்கப்பட்டுப் போவதைப் பார்ப்பார். உங்களோடு ஒப்பிடுகையில் கொலைகாரர்கள், கடத்தல்காரர்கள், வழிப்பறி கொள்ளையர்கள் மற்றும் அவர்களைப் போன்றவர்கள் யாவரும் கண்ணியமானவர்கள்! (கையெழுத்தோ அல்லது முகவரியோ கொடுக்கப் படவில்லை).

யோபின் வார்த்தைகள் எவ்வளவு வித்தியாசமானதாக இருந்தது! யோபு தன்னுடைய எல்லா இன்னல்கள் மத்தியிலும் தன்னுடைய உதடுகளினால் பாவம் செய்யாத படிக்கு மிகவும் கவனமாயிருந்தார். அவருடைய வார்த்தைகள் அவருடைய இருதயத்தைச் சுட்டிக் காட்டுவதாக கர்த்தரால் எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறிந்திருந்ததுடன், தன் இருதயம் மற்றும் வார்த்தைகள் இரண்டையும் காத்துக் கொள்ள மிகவும் கவனமாக இருந்து, "**தேவன் கையில் நன்மையை** (ஆசீர்வாதம்) **பெற்ற நாம் துன்ப அனுபவத்தையும் பெற வேண்டாமோ.**" (யோபு 2:10, ரோதர்காம்) என்று கூறினார். இந்த பாடத்தில் துரதிர்ஷ்டம் என்பது இயற்கை சீரழிவுகளை, அதாவது உபத்திரவங்கள் வழியாக சீர்ப்படுத்துதல் அல்லது சுத்திகரிக்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. "**கர்த்தர் கொடுத்தார்: கர்த்தர் எடுத்தார்: கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்**" (யோபு 1:21). இப்படிப்பட்ட அன்பான சமர்ப்பித்தல், பொறுமை, கடுமையான சோதனைகளின் கீழ் விசுவாசம் ஆகியவை ஏராளமாக வந்த இருதயத்தில், அதோடு கூட அவைகளை அனுமதித்ததில் தேவ ஞானம் தெளிவாக இடம் பெற்றிருத்தல் இல்லாதிருக்கையிலும், கலகம் விளைவிக்கும் ஆவி இருக்கவில்லை. சங்கீதக் காரன் தேவனுடைய பிரதிஷ்டை செய்த பரீட்சிக்கப்பட்ட ஜனங்களின் வாயில் இந்த உறுதியான தீர்மானமான வார்த்தைகளை வைக்கிறார். "**என் நாவினால் பாவஞ் செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து துன்மார்க்கன்** (நீதிமானை சோதித்து பரீட்சிக்கிறவன்) **எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கி வைப்பேன் என்றேன்.**" (சங். 39:1).

## கடமை அன்பு மற்றும் தன்னலமற்ற அன்பு

இந்த பாடத்தில் அடுத்ததாக கருத்தில் கொள்வதற்கு ஜாண்சன் போதகருடைய எழுத்துக்களில் 1946, பக்கம் 77-லிருந்து வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து நாங்கள் பயன்படுத்துகிறோம். நாங்கள் நேரடியாகப் பேசும் எழுத்து நடையையும் பயன்படுத்துவோம், ஏனெனில் அந்த முறையில் தான் வாசகர்கள் ஒவ்வொருவரும் இதைப்

**கடமை அன்பு**
**முக்கியத்துவம் வாய்ந்தது**

உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக.
மத். 22:37

**தன்னலமற்ற அன்பு**
**நிபந்தனையற்றது**

சகலத்தையும் தாங்கும்
சகலத்தையும் விசுவாசிக்கும்
சகலத்தையும் நம்பும்
சகலத்தையும் சகிக்கும்
தனிப்பட்ட ஆதாயங்களினால் உந்தப்படாது.
1 கொரி. 13:4-8

படிப்பார்கள். இந்த பாடத்தில் சம்பந்தப்பட்டுள்ள வார்த்தைகளை மனப்பாடம் செய்யப்பட வேண்டும் என்ற கருத்து சொல்லப்படவில்லை. மாறாக கருத்துக்களும் உணர்வுகளும் ஒவ்வொருவரும் விரும்புகிற மொழியிலும், பயன்பாட்டிற்கு சுலபமாகவும் தெரிவிக்கப்பட வேண்டும். முதலாவதாக, தேவனிடம் கடமை அன்பை பயிற்சி செய்வது பற்றி நாம் கற்றுக் கொள்வோம். தேவனிடம் கடமை அன்பை ஒருவன் உணரச் செய்ய தீர்மானம் செய்யும் போது, அதாவது அவர் தனக்குச் செய்திருக்கிற எல்லா நன்மைகளுக்காகவும், முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் நன்றியறிதலுள்ள நல்லெண்ணம் கொள்ளும் போது, அவன் சொல்கிறான்; என் பரலோக பிதாவே நீர் எனக்கு செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் என் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் உம்மில் அன்பு கூருகிறேன்; ஏனெனில் என்னையும் என்னை சுற்றியுள்ளவைகளையும் பொறுத்த வரையில், சிருஷ்டிப்பில் நீர் எனக்கு அதிகமான நன்மையைச் செய்திருக்கிறீர்; பாதுகாப்பதன் மூலமாகவும் எனக்கு பயிற்சியளிப்பதன் மூலமாகவும் பரிபாலனம் செய்தீர். உமக்கு மிகவும் பிரியமான, குமாரனை உலகத்தில் அனுப்பி எனக்காக மரிக்கக் கொடுத்த மீட்பதிலும், உம்முடைய வார்த்தையின் எளிய மற்றும் ஆழ்ந்த விஷயங்களுக்கு என்னைப் பிரகாசிப்பிக்கச் செய்ய போதித்ததிலும், நீதிமானாக்குதலில் உமக்கு நேராக மனம் திரும்புதலும், என் கர்த்தராகிய இயேசுவுக்கு நேராக விசுவாசத்தையும் என் இருதயத்தில் கிரியை செய்வதன் மூலம் நீதிமானாகுதலிலும், என்னுடைய பாவங்களை எனக்கு மன்னிப்பதன் மூலமாகவும் கிறிஸ்துவின் நீதியை எனக்கு சாட்டுதல் செய்வதன் மூலமாகவும் உம்மோடு கூட ஐக்கியத்திற்குள்ளாக என்னை எற்றுக் கொள்வதன் மூலமாகவும், என்னுடைய சீர்கேட்டை மேற்கொள்ள எனக்கு உதவுவதன் மூலமாகவும்; என்னுடைய சித்தத்தையும், சரீரத்தையும் உம்முடைய சித்தத்துக்கு என்னை கொடுக்கச் செய்ய வைத்ததன் மூலமாகவும், உம்முடைய சாயலில் என்னுடைய ஆவியை வளர்ச்சியடையச் செய்வதன் மூலமாக பரிசுத்தமாகுதலிலும், என்னுடைய சத்துருக்கள்,

பிசாசு உலகம் மற்றும் மாம்சம் ஆகியவற்றின் மீது எனக்கு ஜெயம் கொடுப்பதன் மூலம் விடுதலையிலும், மரணம் மற்றும் பாதாளத்தின் மீது ஜெயம் பெறும் நம்பிக்கையைக் கொடுப்பதன் மூலமாகவும், எனக்கு நன்மை செய்தீர் ஓ! எனக்கு அன்பான பிதாவே, இவைகளுக்காகவும், உம்முடைய அநேக உபகாரங்களுக்காகவும் நான் உம்மை நேசிக்கிறேன். நான் என்னுடைய முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் உம்மை நேசிக்கிறேன். ஆம், என்னுடைய வாழ்க்கை முழுவதிலும் நீர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் உம்மை நேசிக்கிறேன். விசேஷமாக உம்முடைய குணாம்சமாகிய ஞானம், வல்லமை, நீதி மற்றும் அன்பில் நீர் எனக்கு செய்கிற எல்லா நன்மைகளுக்காகவும் உம்மை நேசிக்கிறேன்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கு நேராக நாம் கடமை அன்பையும், தன்னலமற்ற அன்பையும் பயிற்சி செய்வதை கவனத்தில் எடுப்போம்; அந்த பயிற்சி தேவனிடமாக நம்முடைய கடமை மற்றும் தன்னலமற்ற அன்புக்கு அதிக அளவில் ஒத்ததாக இருக்கிறது. இவ்வாறாக நாம் தொடங்குவோமாக: எனக்கு அன்பான கர்த்தராகிய இயேசுவே! பிதாவின் கீழ் நான் உம்மை என் முழு இருதயத்தோடும் முழுமனதோடும், முழு ஆத்துமா வோடும், முழு பெலத்தோடும் நேசிக்கிறேன். தேவனுடைய பிரதிநிதியாக எனக்கும், என்னைச் சுற்றியுள்ள காரியங்களிலும் சிருஷ்டிப்பில் நீர் எனக்குச் செய்த அதிக நன்மைக்காக உம்மை நான் மிகவும் நேசிக்கிறேன்: என்னை பராமரித்து பயிற்சி கொடுப்பதன் மூலமாக பரிபாலனத்திலும், மீட்பில், மனுஷனாவதற்கு முந்தின உம்முடைய நிலைமை, உத்தியோகம் கனம் இன்னும் இது போன்றவற்றை விட்டு விட்டீர்... தேவனுடைய ஆவியை என்னில் வளரச் செய்யவும்; விடுதலையாவதில் உலகம் மற்றும் மாமிசம் மற்றும் எதிராளியானவன் மீது வெற்றிய டைவதற்கு என்னை வழி நடத்துவதன் மூலமாகவும், மரணம் மற்றும் கல்லறையின் மீது வெற்றி பெறும் நம்பிக்கையை எனக்கு கொடுப்பதன் மூலமாகவும் நீர் எனக்கு நன்மை செய்தீர். எனக்கு அன்பான கர்த்தராகிய இயேசுவே! நான் என் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் நீர் எனக்கு செய்த இந்த நன்மைகள் எல்லாவற்றிற்காகவும் நான் உம்மை நேசிக்கிறேன்.

நீர் நல்லவராயிருப்பதற்காக அன்பான பாராட்டு-தலையும் களிகூருதலையும், நான் உமக்கு செலுத்து-கிறேன்; நீர் மாம்சத்திலிருந்த காலத்திலும், ஆவிக்குள்ளாக வந்திருக்கிற வரையிலுமாகிய இரண்டு சமயங்களிலும் நீர் தவறாக நடத்தப்பட்டதற்காக ஒத்துணர்வான அன்பையும், நான் உமக்களிக்கிறேன்; எப்படியெனில் நீர் துன்மார்க்க மனிதர்களாலும் மிகுதியும் தவறாக நடத்தப்பட்டீர்; இதற்காக நான் என் அருமை கர்த்தராகிய இயேசுவே, நானும் உம்மோடு கூட வருந்துகிறேன். உம்முடைய ஆள்தன்மை, குணாதிசயம், வார்த்தை மற்றும் உத்தியோகம் ஆகிய-வற்றுக்காக என்னுடைய பாராட்டுதல் மற்றும் களிகூரு-தலும், நீர் பெற்றுக் கொண்ட மோசமான நடத்துதலில் உம்மோடுகூட என்னுடைய அனுதாபத்தையும், என்னுடைய ஜீவியத்தை உம்முடைய வசனம் மற்றும் நோக்கங்கள் முன்னேறிச் செல்வதற்காக பலியாகக் கொடுப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாறாக இயேசுவுக்கான கடமை அன்பு மற்றும் தன்னலமற்ற அன்பின் பயிற்சி முடிகிறது.

அடுத்ததாக நாம் உலக மனுக்குலத்தாருக்காக கடமை மற்றும் தன்னலமற்ற அன்பை பயிற்சி செய்வதை எடுத்துக் கொள்வோம். உலக மனுக்குலத்தாரிடத்தில், தேவனுடைய சாயலின் தடங்கள் சாபத்தினால் சிதைந்த பின்பும் அவர்கள் தொடர்ந்து பிழைத்து வருவதை அன்புடன் நான் உணர்ந்து பாராட்டுவதுடன் தேவனுடைய சாயலை அவர்கள் முழுவதுமாக திரும்ப பெற்றுக் கொள்வதை மகிழ்ச்சியுடன் எதிர்பார்க்கிறேன். நான் உலக மனுக்குலத் தாரின் சடத்துவ, மானத, சன்மார்க்க மற்றும் மத சம்பந்த-மான சீர்கேடுகளுக்காக பரிதாபம் கொள்கிறேன்; அது குற்றங்கள், குறைவுகள் மற்றும் பெலவீனங்களாக தன்னை வெளிப்படுத்துகிறது. உலகத்தார் பொல்லாத தேவ தூதர்கள் மற்றும் பெலவீனமான அறிவீனமான துன்மார்க்க மனுஷர்களின் கீழ் மோசமான நடத்துகிறதற்காகவும் நான் பரிதாபம் கொள்கிறேன்.

## தேவனுடைய வார்த்தைகள்

கடைசியாக, ஒருவருடைய சத்துருக்களிடம் கடமை மற்றும் தன்னலமற்ற அன்பை வளர்த்துக் கொள்வதைப் பற்றி கருத்துக்களை நாங்கள் கொடுக்கிறோம். இது உலக மனுக்குலத்தாருக்காக அன்பை பயிற்சி செய்வதில் கூறப்பட்ட வார்த்தைகளைப் போலவே இருக்கிறது. சாபத்தின் சிதைவுகளிலும், தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிற அவர்களிடம் தேவ சாயலின் தடங்கள் தெரிவதை உணர்ந்து பாராட்டுவதில் நான் சத்துருக்களையும் நேசிக்கிறேன்.

"**நானே தேவன், வேறொருவரும் இல்லை: நானே தேவன் எனக்கு சமானமில்லை: அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன் அதை திட்டம் பண்ணினேன்: அதை செய்து முடிப்பேன்.**" (ஏசா. 46:9,11).

ஏசா. 1:3 "**மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும், அறியும்**" என்று கூறுகிறது, இந்த வார்த்தைகள் நம்முடைய பரமபிதா அவருடைய தீர்க்கதரிசியாகிய ஏசாயா மூலமாக அவர் தயவு காட்டி-யிருந்த இயல்பான மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்க ளாகிய இரண்டு வகுப்பார்களில் அநேகருக்கு எதிராக முறையீடு செய்வதற்கு எடுத்துக்காட்டாக பயன்படுத்தப் படுகிறது. அவர்கள் காட்டு விலங்குகளிடமிருக்கும் ஞானத்தைக் கூட வெளிப்படுத்திக் காண்பிக்கவில்லை என்று அவர் அவர்களிடம் ஏசாயா கூறுகிறார். நம்முடைய கடந்த கால குருட்டுத்தனமான தடுமாற்றத்திற்குப் பின்பும் கர்த்தர் நம்முடைய கடைசி இரண்டு நட்சத்திர

அங்கத்தினர்களுடைய பூமிக்குரிய வாழ்நாட்களின் போது திறந்து கொடுத்த விலையேறப் பெற்ற சத்தியத்தில் தாராளமாக நமக்கு கொடுத்திருக்கிற சத்தியங்களில் திருப்தி, ஆசீர்வாதம், பிரகாசிப்பித்தல் மற்றும் புத்துணர்ச்சி ஆகியவற்றிற்கு பிறகும், நம்மில் ஒருவரும் அவற்றிலிருந்து எதையும் நீக்கிப் போட நினைப்பதில்லை என்று ஒருவர் எண்ணலாம். நிச்சயமாகவே வேத வாக்கியங்களின்படி நிரூபிக்கப்பட்ட எல்லா சத்தியங்களும் கர்த்தரிடத்திலிருந்து வருவதாகவே நாம் உணர்ந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மாடு தன் எஜமானரை அறிந்து கொள்ள முடிவது போல, நாம் கண்டிப்பாக நம்முடைய தேவனை அறிந்துக் கொள்ளக் கூடியவர்களாகவும், அவருடைய பரிபாலனத்தையும் நம்முடைய காரியங்களில் எல்லாம் அவருடைய மேற்பார்வையையும் உணர்ந்து கொள்ளக் கூடியவர்காளகவும் இருக்க வேண்டும்.

ஆனால் எல்லாருடைய விஷயத்திலும் அப்படி-யில்லை, சொல்லுவதற்கு நாங்கள் வருத்தப்படுகிறோம், சிலர் கர்த்தர் தம்முடைய ஜனங்களை மேற்பார்வை செய்வதையும் நாம் ஜீவிக்கிற இந்த காலத்தைப் ப ற்றிய அவருடைய ஏற்பாடுகளையும், இப்போது அறிவிக்கப்பட ஏற்றதாயிருக்கிற நிகழ்கால சத்திய செய்திகளாகிய (வெளி. 19:5-9), திரள் கூட்டத்தாரின் அங்கீகரிக்கக்கப்பட்ட வேலையாகிய எபிஃபெனி பாளையத்தைக் கட்டுதல் மற்றும் தற்காலத்தில் திறக்கப்பட்டு வருகிற சத்தியம் ஆகியவற்றை கவனிக்கத் தவறுகிறதாகத் தோன்றுகிறது. வனாந்திரத்தில் மாம்ச இஸ்ரயேலருக்கு அற்புதமாக பொழிந்தருளப்பட்ட மன்னாவானது, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய திரள்கூட்டத்தாருக்கோ (இப்போது ஆவி ஜீவிகள்) வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களாகிய, தற்காலத்தில் கர்த்தருடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களுக்கோ தற்போது வழங்கப்பட்டு வருகிற ஆவிக்குரிய மன்னாவைக் காட்டிலும் அதிக ஆச்சரியமானதாகவோ, தேவனுடைய பரிபாலனத்-தில் விசுவாசத்துக்கு மேலான அஸ்திபாரமாவோ இருக்கவில்லை. இருந்தபோதிலும் சிலர் கர்த்தரை தங்கள் எஜமானவராக அறிந்து கொள்ளவில்லை. "**அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கை பண்ணுகிறார்கள்: கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்.**" (தீத்து 1:16). எனவே அருமை சகோதரர்களே, நம்முடைய வழிகளைக் குறித்து நாம் கவனித்துப் பார்ப்போமாக, "தேவனுடைய நல்வார்த்தை" பற்றிய நம்முடைய ருசியை நாம் இழந்து விடாதிருப்போமாக, தேவனுடைய போதனைகளை நாம் வெறுக்கவோ அல்லது நமக்குப் பின்னாக எறிந்து விடாமலோ இருப்போமாக.

தேவனுடைய சத்திய மேஜையிலிருந்து போஜனம் பண்ணுவது பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளையின் சிலாக்கியமும், கடமையுமாயிருக்கிறது; "**உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்: உம்முடைய வார்த்தைகள் எனக்கு சந்தோஷமும் என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது: சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது.**" (எரே. 15:16). மத். 4:4-ல், "**மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்**" என்பதும் நம்முடைய கவனத்துக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. தற்போதைய நிலைமைகளின் கீழ் அப்பமும், உணவும் மனுஷனுடைய வாழ்வாதாரத்துக்கு அவசியம் என்ற கருத்தை நம் கர்த்தருடைய வார்த்தைகள் ஒப்புக் கொள்கின்றன. ஆனால் அவை மேலும் ஒரு எண்ணத்தை தாங்கியிருக்கிறது; அதாவது, அவை தற்கால ஜீவியத்தை காட்டிலும் மேலான ஒரு ஜீவியத்துக்கு நம்முடைய கவனத்தை இழுக்கின்றன. தற்கால ஜீவன் உண்மையாகவே ஒரு ஜீவனல்ல, ஆனால் மரணமே ஆகும். உலகமானது தேவனுடைய மரண தண்டனையின் கீழிருக்கிறது, கிறிஸ்துவின் மூலமாக விசுவாசத்தினால் தேவனுடன் ஐக்கியத்துக்குள்ளாக வந்திருப்பவர்கள் மட்டுமே, "**மரணத்திலிருந்து ஜீவனுக்கு கடந்து சென்றிருக்கிறார்கள்.**" 1 யோவா. 5:12-ல் அப்போஸ்-தலன் சொன்னது போலவே, குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன். இயேசுவின் ஊழியக்காரனாகவும் அவரைப் பின்பற்றுகிறவராகவும் மாற வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்து, ஆனால் அவனது தகப்பனார் மரிக்கும் வரை காத்திருக்க விரும்பிய ஒருவனிடம் கர்த்தர், கூறியது என்னவெனில்: "**மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும், நீ என்னைப் பின்பற்றிவா.**" (மத். 8:22).

நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கைகள் எல்லாம் தேவன் மீது அதாவது தெய்வீக திட்டத்தின்மீதும் அதன் வாக்குத்தத் தங்கள் மீதும் சார்ந்திருக்கின்றன. இந்த வாக்குத்தத்தங்-களுக்குள்ளாக நோக்கிப் பார்க்கையில், உலகத் தோற்றத் துக்கு முன்பு இருந்தே தேவனுடைய சிருஷ்டிகள் எல்லாம் அவருடைய சாயலில் உருவாக்கப்பட்டு, விசுவாசம், அன்பு, கீழ்ப்படிதலில் நிலைத்திருந்து, அவருடன் இசைவாக இருப்பவர்கள் நித்தியமான ஜீவனைப் பெற்றுக் கொள்-வார்கள் என்கிற தேவனுடைய திட்டத்தை நாம் தெளிவாகப் பார்க்க முடிகிறது. இதுவே இக்கருத்தின் மீதான தேவனுடைய பொதுவான வார்த்தையாயிருக்கிறது, அதாவது கீழ்ப்படி-தலே நித்திய ஜீவனைப் பெறுவதற்கான நிபந்தனையாக இருக்கிறது. மனுஷனுடைய வார்த்தைகள் கலா. 6:7-ல் கொடுக்கப்பட்டுள்ள "**மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்**" என்ற கருத்தை உள்ளடக்கியிருக்க வேண்டும். நாம் பார்த்திருக்கிறபடி, எந்த மனுஷனானாலும், தான் விதைக்கிறதையே தான் அறுப்பான் என்ற ஒரு பொதுவான கூர்ந்து கவனித்தறிந்த கருத்தை பரி.பவுல் ஏற்படுத்தியிருப்பினும், அவர் இந்த வார்த்தைகளை "சகோதரர்களின்" அனுபவங்களைப் பற்றியே குறிப்பிட்ட ஆதாரத்துடன் தெளிவாக பயன்படுத்தியுள்ளார். அந்த வசனம் எடுக்கப்பட்ட சூழல் அப்படிப்பட்ட பொருத்தத்தை ஏற்படுத்துகிறது. அந்த வசனத்தின் சந்தர்ப்பசூழல் பிரதிஷ்டை செய்த தேவனுடைய ஜனங்களுக்கு இந்த வார்த்தைகளை

நேரடியாக பொருந்தச் செய்து கிறிஸ்துவுடன் மரித்தவனாயிருக்கும் படியான பிரதிஷ்டை மட்டும் போதுமானதல்ல என்பதை அது அவர்களுக்கு நிச்சயப்படுத்துகிறது. அதற்கு மாறாக தேவன் தம்மை பரியாசம் பண்ணவொட்டார் மோசம் போக விடமாட்டார், அற்பமாயெண்ணப்படவும் விடமாட்டார்.

யாத். 4:2-ல்: "**உன் கையில் இருப்பது என்ன?**" என்று கர்த்தர் மோசேயிடம் கேட்ட ஒரு காலம் இருந்தது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், உன்னால் என்ன கொடுக்க முடியும்? உன்னுடைய இயல்பான திறமைகள் என்ன? இவை உடனடியாக அவருடைய மகிமைக்காக பயன்படுத்தப்படுவதற்கு நம் கையிலிருக்கிறது. நமக்கு போதுமான நேரம் கிடைக்கிறது. செல்வாக்கு, அறிவு, பணம், பயிற்சி, அனுபவம், உபத்திரவப்படுகிறவர்களைப் பற்றி கேட்கிற செவி, மற்றவர்களை ஆறுதல்படுத்துகிற ஒரு திறமை ஆகியவற்றையெல்லாம் நாம் பெற்றிருக்கலாம் – இந்த திறமைகளெல்லாம் நம்முடைய தெய்வீக எஜமானருடைய ஊழியத்தில் பயன்படுத்தப்பட வேண்டும்.

"**யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்? என்ற கர்த்தருடைய வார்த்தையை ஏசாயா கேட்டபோது, அவர், இதோ அடியேன் இருக்கிறேன்: என்னை அனுப்பும்**" (ஏசா. 6:8) என்று பதிலளித்து அங்கே ஜீவிய




காலம் முழுவதும், விடாமுயற்சியுள்ள ஊழியனாக கர்த்தரைப் பின்பற்றி நடந்தார்.

எனவே நம்மிடம் இருக்கிறது எதுவோ அதை வைத்துக் கொண்டு, வேலை செய்வதற்கு, தேவனுடைய ஊழியத்தில் எந்த துறையில் அவர் நம்மை தகுதியுள்ளவராகக் காண்கிறாரோ, அதில் எந்த இடம் என்றாலும், என்ன விலை கொடுத்தாவது வரப்போகிற யுகத்தில் பூமியிலுள்ள எல்லா வம்சங்களுக்கும் ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும் மாபெரும் வேலையில் நாம் பங்கு பெற்று வேலை செய்வது, நம்மீது விழுந்த பொறுப்பாக இருக்கிறது. இதைக் காட்டிலும் சிறந்த வெகுமதி வேறு எதுவாக இருக்கப் போகிறது? தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாக, "**இதோ அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும்**" என்பது நம்முடைய வார்த்தைகளாக இருப்பதாக!

***

# இழந்து போனதும், திரும்பப் பெற்றுக் கொண்டதுமான ஆளுகை

## The Lost and Restored Dominion

"**வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும், ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்கு கொடுக்கப்படும்: அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்: சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்" – தானி. 7:27**

தேவன் மனிதனை சிருஷ்டித்த போது, அவர் தம்முடைய சொந்த குணப் பண்புகளைப் போலவே உள்ளவனாக சிருஷ்டித்தார். நியாயம் மற்றும் நீதியான குணப் பண்புகள், அவனை ஞானமும், நீதியும் உள்ள ஒரு ஆட்சியாளனாக தகுதிபடுத்தியிருந்தது. கருணையும் அன்பும் உள்ள பண்புகள் அவனை ஒரு நியாயமான மற்றும் இரக்கமுள்ள ஆட்சியாளராக தயார்படுத்தியிருந்தது. இது தான், ஆதாம் என்னும் பூமியின் முதல் ராஜாவைப்பற்றிய ஒரு சுருக்கமான விவரமாகும். அவனுடைய சிருஷ்டிகரின் சாயலில் (சுத்துவத்தின்படியல்ல, ஆனால் மனம், சன்மார்க்கம், மதம் சம்பந்தமான காரியங்களில்) தேவன் எல்லாவற்றின் மீதும் ஆட்சியாளராக இருப்பது போல அவனுக்கும் பூமியின் மீதும், அதன் சிருஷ்டிப்புகள் மற்றும் காரியங்கள் மீதான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறாக, மனிதன் தேவனுடைய ரூபத்தின்படி சிருஷ்டிக்கப்பட்டது மட்டுமல்லாமல், அவருடைய சாயலின்படியும், சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப்பறவைகளையும், மிருக ஜீவன்களையும், "பூமியின் மேல்" ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளுகை செய்வதற்கான அதிகாரத்துடன் சிருஷ்டிக்கப்பட்டிருந்தான் (ஆதி. 1:26-28) என்று நாம் வாசிக்கிறோம். "**நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்: மகிமையினாலும், கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்: உம்முடைய கரத்தின் கிரியைகளின் மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.**" (சங். 8:5,6). இந்த மகிமை, கனம் மற்றும் அரசாட்சி ஆகிய அனைத்தையும் பூரணமாகக் கொண்டிருந்த அவனுடைய இயல்புக்கு இசைவாகவும், அவனுடைய சிருஷ்டிகருக்கு பூரண இசைவாகவும் பயன்படுத்தும்படியாகவும் ஆதாமுக்கு கொடுக்கப்பட்டது.

தேவன் அப்பொழுது பூமி முழுவதையும் மனிதன் தொடர்ந்து ஜீவித்திருப்பதற்கு ஏற்றவாறு ஏற்பாடு செய்யவில்லை. ஆரம்பித்திலிருந்தே முடிவினை தேவன் அறிந்திருந்தபடியால், ஆதாம் பாவம் செய்வான் என்று அவர் அறிந்து, பூமியில் ஒரு சிறிய பாகத்தை மட்டுமே ஆயத்தம் செய்திருந்தார். "**தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின**

**மனுஷனை அதிலே வைத்தார்.**" (ஆதி. 2:8). இவ்வாறு யேகோவா தேவன் தோட்டத்தில் ஆதாமுடைய நலனுக்காக ஒவ்வொரு முன்னேற்பாடான காரியங்களையும் அவனுடைய சோதனைக்காக ஏற்பாடு செய்திருந்தார். பூரணமான மனித ஜீவன் தொடர்ந்து ஜீவியத்திருப்பதற்கான வழிவகை, பொதுவாக சொல்வதாக இருந்தால், "**தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தில் தான் இருந்தது.**" (ஆதி. 2:16). அதாவது, ஆதாமின் வாழ்வாதாரத்திற்கு அருளப்பட்டிருந்த ஆகாரம் அவனுடைய தேவைகளைச் சந்திப்பதற்கும், அவனுடைய சரீர அமைப்பின் கழிவுகளை வெளியேற்றி, அவனுடைய பூரண மனுஷீக நிலையின் புத்துணர்ச்சியையும், ஆரோக்கியத்தையும் என்றென்றைக்கும் காத்துக் கொள்ள - பூமியில் நித்திய ஜீவனை அவனுக்கு கொடுப்பதற்கு முற்றிலும் போதுமானதாக இருந்தது.

## ஏவாள் சாத்தானால் ஏமாற்றப்பட்டாள்; ஆதாம் தேவனுக்கு கீழ்ப்படியவில்லை

சிருஷ்டிகருக்கு கீழ்ப்படியாமலிருப்பது அதற்கு தண்டனையாக மரணத்தைக் கொண்டு வரும் என்று ஆரம்பத்திலிருந்தே ஆதாமுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. (ஆதி. 2:17). ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஆனால் துணிகரமாக பாவஞ் செய்து, மீறுதலுக்கு உட்பட்டான் அதற்குத் தண்டனையாகிய மரணம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நீதி வற்புறுத்தியது. தண்டனையை பொருத்த வரையில், ஆதாம் கீழ்ப்படியாமற்போன அதே வேளையில், அதே வருடத்திலா அல்லது ஆயிரம் வருடத்திற்குப் பின்னர் மரித்தானா என்பது காரியமல்ல. அவன் மரித்தாக வேண்டும். வேதாகமத்தில் "நாள்" என்கிற வார்த்தையானது 12 மணி நேரம் அல்லது 24 மணி நேரம் கொண்ட காலப்பகுதியையோ "**வனாந்திரத்தின் சோதனை நாளாகிய**" 40 வருட நாளையோ (சங். 95:8-10; எபி. 3:8) ஆறு சிருஷ்டிப்பின் நாட்கள் அல்லது சகாப்தங்களையோ, அவைகள் அனைத்தையும் சேர்த்தோ (ஆதி. 2:4), யூத யுக காலமாகிய 1845 வருடங்கள் முழுவதையுமோ (ஏசா. 65:2; ரோம. 10:21), 1900 வருடங்களுக்கும் மேலான சுவிசேஷ யுக காலப்பகுதியையோ (சபைக்கான இரட்சணிய நாள் 2 கொரி. 6:2) அல்லது உலகத்தாருக்கான 1000 வருட நியாயத்தீர்ப்பு நாளையோ (அப். 17:31; 2 பேது. 3:7,8; ஏசா. 11:10; 25:9) குறிப்பிடும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியைக் குறித்துக் காட்டுகிறதாக இருக்கிறது.

ஆதாம் பாவம் செய்த அந்த 24 மணி நேரம் கொண்ட நாளிலேயே தேவன் ஆதாமை மரிக்கப் பண்ண காரணம் இருந்த போதிலும் அவர் அப்படிச் செய்யவில்லை, ஆனால், "**அதை நீ புசிக்கும் நாளில் செத்துக் கொண்டே நீ சாவாய் என்று கட்டளையிட்டார்**" (ஆதி. 2:17) மார்ஜின் என்று வேத வாக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. விருட்சங்களின் மூலமாக அருளப்பட்ட ஜீவனைத் தரும் ஆகாரத்தை, ஆதாம் அனுகாதபடி, எளிதான முறையில் பிரிக்கப்பட்டதன் மூலம் தேவன் இந்தத் தீர்ப்பை கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேற்றினார். அவர் ஆதாமை தோட்டத்திலிருந்து வெளியேற்றி விட்டு, அவன் அதன்பிறகு, ஜீவ விருட்சத்தை (மரம், தோப்பு அதாவது விருட்சங்கள்) அணுகாதபடிக்கு கேரூபின்கள் மற்றும் வீசிக் கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தினால் தடுத்து விட்டார். (ஆதி. 3:22-24).

நேர்மையான முறையில் சோதிக்கப்பட்டு, நியாயமாக தண்டனைக்குள்ளாக்கப்பட்ட சிருஷ்டிகளை, முட்களும், புதர்களும் நிறைந்த சபிக்கப்பட்ட பூமியில் வேதனை, துக்கம், மற்றும் நோய்களுடன், இயற்கையின் முடிவு பெறாத வேலையாகிய காலநிலை மாற்றங்கள் மற்றும் இயற்கை பேரழிவுகளின் கீழ் கடினமாக உழைத்து வாழவும் தோட்டத்திலிருந்து அனுப்புகையில் பேசின சிருஷ்டிகரின் வார்த்தைகளில் ஆழமான அர்த்தம் இருக்கிறது. "**பூமி உன்னிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்**" (ஆதி. 3:17-19) என்று அவர் கூறினார். அதாவது, நீ பூமியை இப்பொழுது மேன்மையாக கருதாவிட்டாலும்கூட உன்னுடைய பிரயோஜனம் மற்றும் அனுபவத்துக்காக இந்த பூமி, பொதுவாக அதன் தற்போதைய அபூரணமான நிலைமையிலேயே இருக்கும் என்று கூறினார்.

இவ்வாறு, ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்கு சொந்த ஜனங்களை இழந்தும் வியர்வையால், அதைத் தக்க வைத்துக் கொள்வதிலும் ஆதாம் இதை மிகவும் கடினமான காரியமாகக் கண்டார். அதன் விளைவாக, அவன் தீமை என்றால் என்ன, பாவத்தின் மிகக் கசப்பான தன்மையையும், அதன் முடிவையும் அறிந்து கொள்ள முடிந்தது. சந்தேகமின்றி, அவன் ஏதேன் தோட்டத்தில் வசிப்பதற்கு திரும்பவும் அனுமதிக்கப்படுவதை அடிக்கடி விரும்பியும், அநேகமாக ஜெபித்தும் இருக்கலாம். பாவத்தைக் குறித்து அவனுடைய சிறந்த அறிவும், அவன் அனுபவித்த தீமையும், அவனுடைய வேண்டுதல் அருளப்பட்டிருந்தால், மிக உயர்வான பரிசாகிய நற்காரியங்கள் அங்கு அனுபவிக்கப் பட்டு, நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் (யாக். 1:17) இறங்கி வருகிறவரிடம் இடைவிடா அன்பும், கீழ்ப்படிதலுமுள்ளவராயிருப்பேன் என்று அநேகமாக வாக்குறுதியும் கொடுத்திருந்திருப்பார். ஆனால், தேவனுடைய திட்டம் இதை விட குறைவான அன்பு உள்ளதாக இருக்கவில்லை என்ற போதிலும், அது அகலமானதும், ஞானமுள்ளதாகவும், அதிக விசாலமானதாக புரிந்துக் கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. அவருடைய திட்டம் என்பது, ஆதாம் மட்டுமல்ல, அவனுடைய சந்ததியார் முழுவதுமே பாவம் மற்றும் கீழ்ப்படியாமையின் கசப்பு பற்றிய இந்த அதே பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும், இதை ஒவ்வொருவரும் தனித்தனியாக கற்றறிந்து முழுவதுமாகப் போற்றிப் பாராட்ட வேண்டும் என்பதாக இருந்தது. அதன்பின்பு, எல்லோரையும் ஏதேன் நிலைமைக்கு திரும்பிக் கொண்டு வந்து, பாவம் என்றென்றைக்குமாக அகற்றப்பட்டு மனுக்குலம் முழுவதிலுமாக, விருப்பத்துடன் கீழ்ப்படிபவர்கள் - விருப்பமுள்ளவர்கள் எவராயிருந்தாலும் - தேவனுக்கு இசைவாக இந்த பூமியில் என்றென்றைக்குமாக ஜீவிப்பார்கள்.

## மனிதன் படிப்படியாக பூரணத்தை இழந்தான்

பூரண மனிதாக இருந்த ஆதாமின் பூரணமான சடத்துவ சரீரத்தின் மீது உழைப்பும், கவலையும் ஏற்ற

நேரத்தில் அவனுக்குச் சொல்லப்பட்டு, அதன் பலனாக முடிவில் முழுவதுமாக வீழ்ந்து போதிலும், கடைசி மூச்சு அல்லது ஜீவ சுடரையும் அவனுடைய பிடியிலிருந்து பிடுங்கிக் கொள்வதாயிருந்தது. அவன் அதன்பின்பு முழுவதுமாக இறந்து விட்டான். தன்னுடைய எதிரியாகிய மரணத்துடன் 930 வருடங்களாக போராடிய பிறகு, அவன் முழுவதுமாக மேற் கொள்ளப்பட்டு தோற்கடிக்கப்பட்டவனாக இருந்தான். அவனுடைய மரணம் அவன் பாவம் செய்த அதே ஆயிரம் வருட நாளில் முழுவதுமாக நிறைவேற்றப்பட்டது. (சங். 90:4; 2 பேது. 3:8; ஆதி. 2:17). அவன் இன்னும் தொடர்ந்து மாபெரும் மரணவீடாகிய கல்லறையில் சிறைக்கைதிகளில் ஒருவனாக இருப்பதால், பாவத்தின் தண்டனை (மரணம் - எசே. 18:4,20; ரோம. 6:23) சுமத்தப்பட்ட இந்நாளிலும் அவன் மீது தொடர்ந்து இருந்து. இரண்டாம் ஆதாமாகிய "**வானத்திலிருந்து வந்த கர்த்தர்**" (1 கொரி. 15:47) ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்து (எபி. 2:9) "**நான் மரணத்திற்கும், பாதாளத்திற்குரிய** (ஹாதேஸ், மறதிநிலை) **திறவு கோல்களை உடையவ ராயிருக்கிறேன்**" (வெளி. 1:18) என்று அறிவிக்கிறபடியால், ஆதாமும் அவன் சந்ததியும் "**நம்பிக்கையுடைய சிறைவாசி-களாக**" இருக்கின்றனர். அவர் சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலையும் (மரணம் எனும் மாபெரும் சிறைவீட்டிலிருந்து) அறிவிக் கிறார். (ஏசா. 61:1; யோவா. 5:28,29; வெளி. 20:12,13). பாவம் மற்றும் மரணத்தினால் சிறைப்பட்டவர்களை அவர் விடுதலை செய்வார். (சங். 68:18; எபே. 4:8).

ஏதேன் தோட்டத்தில் ஜீவனைத் தரும் கனிகள் ஆதாமுக்கு தடை செய்யப்பட்டதால், அவனுடைய சரீரப் பிரகாரமான வல்லமைகள் மட்டுமல்ல, அவனுடைய மானத குணப்பண்புகளும் கூட திறனற்றுப்பட்டு போயிற்று. ஏனெனில் சிந்தனை என்பது சடத்துவ ஜீவ சக்தியால் திறன்படுத்தப்பட்டு; மானத உயிர் அமைப்பின் விளை-பலனாக இருப்பதால், அவன் சரீரப்பிரகாரமாக குறைவு-பட்டவனாக மாறியிருக்கையில் பூரண மனதினுடைய திறனின் வீரியத்தை அவன் காத்துக் கொள்வது சாத்தியமில்லாததாக இருந்தது. இந்த குணப்பண்புகளை உற்பத்தி செய்யும் ஒன்று அல்லது இரண்டிற்கும் ஏதாவது உண்மையான பாதிப்பு ஏற்படுமாயின் அவற்றின் விளை-பலனில் குறைபாட்டை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது.

அதன் பின்பு, ஆதாமின் மனதின் வல்லமைக ளானது அவனுடைய சடத்துவ சீர்கேடோடுகூட குறைந்து விட்டது. அவனுடைய மனதின் சன்மார்க்க மற்றும் மதம் சம்பந்தமான குணங்கள் மிக அதிகமாக பாதிப்படைந்தது என்று நாம் அறிந்து கொள்ள முடிந்தது. அவனுடைய சரீரம் மற்றும் மனதின் ஆற்றல் தன்னையும், குடும்பத்தையும் பாதுகாக்க, மிக அதிகமான சுமைக்குள்ளான போது, அவனுடைய ஆள்தன்மையின் ஆளும் குணாதிசயங்களில் ஒன்றாக இருக்க வேண்டியதும், தேவனுடைய ரூபத்தின் ஒரு பாகமாகவும் இருக்கிற கருணை என்னும் பண்பு (அன்பு) மிகவும் அதிகமாக கூட்ட நெரிசலுக்குள்ளாகிக் கொண்டிருந்த வேளையில், அன்பிரக்கத்துக்கு பதிலாக கஞ்சத்தனமாகிய பண்பு (சுயநலம்) வளர்ந்து விட்டது என்று யூகிப்பது சரியாக இருக்கிறது. அதே போல உயர்தரமான, மேன்மையான சிறந்த பண்புகள் மிகவும் பாதிக்கப்பட்டு, அதிகமாக வீழ்ச்சியடைந்தபோது, மற்ற கீழ்நிலைப்பண்புகள் (கீழ்நிலை மிருகங்களிடம் பொதுவாக இருப்பவை) அதிகமாக வளர்ந்து விட்டது.




இப்போது இரண்டாவது ஆட்சியாளரைப்பற்றி பார்ப்போம். இந்த ஆட்சியாளரை நாம் மிகத் தெளிவாக அறிந்துணர்ந்து கொள்ள வேண்டுமானால், எந்த அதிகாரம் (வல்லமை) முதல் ஆட்சியாளரை தோல்வியடையச் செய்தது என்று நாம் கவனிக்க வேண்டும். நிச்சயமாகவே, அது மரணம் தான், வேதனை அனுபவித்துக் கொண்டிருக்கும் நித்திய ஜீவன் அல்ல. பாவத்தினால் மரணம் வந்தது. "**எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது.**" ஒருவனுடைய மீறுதலினாலே அந்த ஒருவன் மூல-மாய் மரணம் ஆண்டு கொண்டிருக்கிறது. (ரோம. 5:12-17).

ஆதலால், மீட்கும் பொருள் மற்றும் விடுதலை ஆகியவை முதலில் இருந்தே தேவனுடைய திட்டத்தின் ஒரு பாகமாக இருந்தது. பாவம் மற்றும் மரணமாகிய "**பிசாசி னுடைய கிரியைகளை அழிக்கும் இந்த நோக்கத்திற்காகவே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.**" (1 யோவா. 3:8). அது மட்டுமல்ல, மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது "**மரணத்தினாலே அவர் அழிப்பார்.**" (எபி. 2:14). சாத்தானுடைய பிடியிலிருந்து மனுக்குலம் அனைத்தையும் அவர் விடுவிப்பார்.

தேவநீதி, கடனுக்கென்று, திட்டவட்டமான சரிசமமான ஒன்றைக் கேட்கிறது. ஆதாம் கீழ்ப்படியாமையினாலே அவனுடைய பூரண மனுஷீகம், சரீரம், ஜீவன், ஜீவாதார உரிமைகள், ஜீவிப்பதற்கான உரிமை ஆகியவற்றை பறிகொடுத்துவிட்டான். எங்கே இந்த திட்டவட்டமான சரிசமமான ஒன்றைக் கண்டுபிடிக்க முடிந்தது? நிச்சயமாக, பூமியில் அல்ல, ஏனெனில், ஆதாமின் விழுந்து போன மனுக்குலம் அவனுக்குள் கண்டனத்தீர்ப்புக்குட்பட்டு, "**எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக் கொள்ளவும், அவனிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்குக் கொடுக்கவும் கூடாமற்போயிற்று.**" (சங். 49:7). ஆதாமின் சந்ததியில், "**நீதிமான் ஒருவனும் இல்லை, ஒருவனாகிலும் இல்லை**" (ரோம. 3:10) இப்படித்தான் இருக்கும் என்பதை முன்னரே அறிந்த தேவன், பாவம் இல்லாத மற்றொரு பூரணமான மனிதன், எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மையே ஒப்புக் கொடுப்பதற்கு ஆரம்பத்திலேயே ஏற்பாடு செய்திருந் தார். அதாவது ஆதாம் பாவம் செய்த போதே, ஆதாமுக்காகவும், அவனுடைய ஒரு பாகமாக இருந்த முழு மனுக்குலத்துக்காகவும் இப்படி ஒரு ஏற்பாட்டைத் தேவன் செய்து விட்டார். இவ்வாறு, ஒரே மனுஷனுடைய கீழ்ப்படி-யாமையினாலே, அநேகர் (அதாவது எல்லாரும்) பாவிகளாக்கப்பட்டது போல ஒருவருடைய கீழ்ப்படிதலி

னாலே அநேகர் நீதிமான்களாக்கப்பட்டார்கள். ஆதாமின் பாவத்தின் ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து எல்லோரும் நீதிமானாக்கப்படுவார்கள். (ரோம. 5:19; மத். 20:28).

## தேவனும், இயேசுவும் மாபெரும் அன்பை வெளிப்படுத்தினார்கள்

தேவன் தம்முடைய மாபெரும் அன்பினால் பாவப்பட்ட, விழுந்த போன மனுக்குலத்தின் மீது இரக்கம் கொண்டார். அவர்களை மீட்கும் சிலாக்கியத்தை அவரால் (நேரடியாக) ஜெநிப்பிக்கப்பட்ட அவருடைய ஒரே பேறான குமாரனாகிய அவருடைய சிருஷ்டிப்புகள் எல்லாவற்றிலும் முதன்மையானவருக்கு (எபி. 1:1-8) "**தேவனுடைய சிருஷ்டிப்புக்கு ஆதியுமாயிருக்கிறவருக்குக்**" கொடுத்தார். (வெளி. 3:14; கொலோ. 1:15). இயேசுவானவர் இடைவிளைவான தாழ்த்தப்படுதலும் மற்றும் பாடுபடுதலும் சாசனமாக கொண்டுள்ள அப்படிப்பட்ட ஒரு பிரம்மாண்டமான வேலையை ஏற்றுக் கொள்ளத் தயங்கினார் என்று நாம் நினைக்கக் கூடாது; ஏனெனில், யேகோவா தேவனுடன் பூரண ஐக்கியத்தில் உள்ள ஒருவர் அவருடைய சித்தத்தைச் செய்வதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டிருக்கமாட்டார் என்று நாம் நினைக்க முடியாது. இயேசுவானவர் எந்த சந்தேகமுமில்லாமல் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்; அது கீழ்ப்படிதலினால் மட்டுமல்லாமல், முக்கியமாக அன்பினாலும், அதாவது அவருடைய பிதாவிடம் கொண்டிருந்த முதன்மையான அன்பு மற்றும் விழுந்துபோன மனுக்குலத்தாரிடம் கொண்டிருந்த மிகச் சிறந்த மனதுருக்கமான அன்பினாலும் அவர் மாம்சமாக்கப் படுவதிலும் அவர்களுக்காக மரிப்பதிலும் அவர்களை மரணம் மற்றும் பாவத்திலிருந்து அவர் விடுவிப்பதிலும் (யோவா. 1:14; பிலி. 2:7,8; எபி. 2:14) இது நிச்சயமாகவே "**அவருக்கு முன் வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தின் ஒரு பாகமாக இருந்தது. அதற்காகவே, அவர் அவமானத்தை எண்ணாமல்** [அவமரியாதை, அற்பமான விளைவை எண்ணுதல்] ***சிலுவையை சகித்தார்.***" (எபி. 12:2).

தேவனுடைய சித்தத்தை செய்ய விரும்பியதால் (சங். 40:8) "**இயேசு, தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ சாயலானார்** (தூதர்களை விட சற்றுக் கீழான நிலையில்); **அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை** (சுபாவநிலை, உத்தியோகம் மற்றும் கனம்) **தந்தருளினார்.**" (பிலி. 2:7-9). நிச்சயமாகவே, எல்லா மனுஷரும் பிதாவைக் கனம் பண்ணுகிறது போல, குமாரனையும் கனம் பண்ண வேண்டும். (யோவா. 5:23).

சுவிசேஷ யுகத்தில், இயேசுவை உண்மையாகப் பின்பற்றியவர்களான, ஒரே மெய்யான சபையே - ஆதாமினால் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்ட மனுக்குலத்தாரிலிருந்து இயேசு இரட்சிப்பைத் தருகிற, அதாவது, சாத்தானுடைய ஆளுகை மற்றும் வல்லமையிலிருந்து விடுதலை பெறுகிற முதல் நபர்களாவர். அவர்கள் பின்பற்றுவதற்கென்று, அவர் மிக அற்புதமான மாதிரியை முன்வைத்துப் போனார் (மத். 11:28-30; யோவா. 10:4; 1 கொரி. 11:1; எபி. 12:2; 1 பேது. 2:21; வெளி. 14:4). யோர்தானில் இயேசு தன்னையே - தன்னுடைய மனுஷீகத்திற்குரிய எல்லாவற்றையும் பிதாவிடம் ஒப்புக் கொடுத்து, மரணபரியந்தம், அவருடைய ஊழியத்தில் உண்மையுடன் இருப்பதற்கு அதைக் கீழ்ப்படுத்தினார். "**வானங்கள் அவருக்குத் திறக்கப்பட்டது: தேவ ஆவி புறாவைப் போல இறங்கி, தம் மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.**" (மத். 3:16,17). அந்நேரம் முதல், இயேசு தம்முடைய சொந்த மனுஷீக சித்தத்தைச் செய்யாமல், "**ஆவியினால் வழிநடத்தப் பட்டார்.**" அவருடைய செய்கைகள் இப்பொழுது தேவனுடையதாக இருந்தது. இயேசு சொன்னது போல, நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய் சொல்லவில்லை என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார். "**நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது**" (யோவா. 14:10,24; 17:8). "**பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறென்றையும் தாமாகச் செய்யமாட்டார். அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார். பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்.**" (யோவா. 5:19,20,30). அதே போல, நாம் நம்முடைய ஜீவியத்தை தேவனுக்கு பிரதிஷ்டை செய்து, சுய சித்தத்தை விட்டு விட்டு என்ன நேர்ந்தாலும் அவருடைய சித்தமே எல்லா காரியங்களிலும் நம்மை ஆண்டு நடத்துவதாக என்று இருந்தால், அவரும் நம்மிடம் மிகவும் பிரியமுள்ளவராகவும், கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தால் நம்மை மூடுவதில் களிகூருகிறவராகவும் கிறிஸ்துவின் மீட்கும் பொருள் புண்ணியம் நமது சார்பாகவும் சாட்டப்படுவதால் சிறுமந்தை மற்றும் திரள்கூட்டமாக இருக்கும் பட்சத்தில் உண்மையாகவேயும், வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களாக இருக்கும்பட்சத்தில் தற்காலிகமாக அல்லது அந்த எதிர் காலத்தில் நடக்கும் என்று கருதி முன்கூட்டியே அவர் நம்மை அவருடைய குமாரர்களாக ஏற்றுக் கொள்ளுகிறார். (யோவா. 1:12; ரோம. 8:15; 1யோவா. 3:1).

தேவன் நமக்கு அவருடைய அறிவாகிய பரிசுத்த ஆவியைத் தந்து, அவருடைய இரகசியத்தையும், யுகங்களைப் பற்றிய அவருடைய திட்டத்தையும் நமக்கு வெளிப்படுத்துகிறார். (உபா. 29:29; சங். 25:14; நீதி. 3:32; ஆமோ. 3:7). அவர் தம்முடைய வார்த்தையினாலும், அவருடைய ஆவியினாலும், அவருடைய பரிபாலனங்கள் மூலமாகவும் நம்மை வழிநடத்துகிறார். "**எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.**" (ரோம. 8:14). பிதாவினுடைய சித்தத்தைப் பின்பற்றுவதில் நீங்கள் உண்மையுடனிருந்தால், அவர் இயேசுவுக்கு செய்தது போல, உங்களுக்கும் செய்வார். "**தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.**" (பிலி. 2:13). பிரதிஷ்டை

செய்த பிள்ளைகளாக, நாம் அவருடைய கைவேலை-யாயிருக்கிறோம்.

## பாவ நிவிர்த்தி என்னும் வேலை

நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசு அவருடைய பாவநிவிர்த்தி வேலையை, அவர் யோர்தானில் புது சிருஷ்டியாகிய போது தொடங்கினார். அவர் தம்முடைய மனுஷீகத்தைப் பலியாகக் கொடுக்கும் வேலையில் (ஏசா. 53:10,12) அதாவது, அடையாளத்தில் காளையின் பாவநிவிர்த்தி நாள் பலியில் சித்தரித்துக் காட்டப்பட்ட நிறைவேறதலான பாவ நிவாரண பலியை $3^1/_2$ வருட அவருடைய ஊழிய காலப்பகுதியில், யோர்தான் முதல் சிலுவையில், "எல்லாம் முடிந்தது" என்று கூறியது வரையுள்ள காலத்தில் நிறைவேற்றி முடித்தார். ஆனால், அங்கே முடிந்தது என்ன - பாவநிவிர்த்தி வேலையா? இல்லை. ஒப்புவராக்குதல் என்பது, இரண்டு கட்சிகளை ஒத்துப்போக வைத்தலைக்குறித்துக் காட்டுகிறது. இந்த விஷயத்தில் தேவன் ஒரு கட்சி மனுக்குலம் மற்றொரு கட்சி. மனிதனுடைய பாவம், தேவனுடைய ஆசீர்வாதத்திற்குப் பதிலாக, அவன் மீது தேவனுடைய சாபத்தையும் மரணத்-தையும் கொண்டு வந்தது. அதன் சீர்கெட்ட செல்வாக்கினால் (நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறபடி) மனிதனுடைய மானத, சன்மார்க்க, மதம் சம்பந்தமான சாயலை இவ்வாறு அவனுடைய சிருஷ்டிகரைப் போல இராதபடி தடுத்து, அவன் தேவனுடைய நியாயப்பிரமாணங்களில் சந்தோஷப்படாமல் பாவத்தில் சந்தோஷப்படுகிறவனாக மாற்றியது. அதன் பலனாக, தேவனுக்கும் மனிதனுக்குமிடையே முழு ஒப்புரவாக்குதலைக் கொண்டு வருவதற்கு நிறைய வேலைகள் செய்யப்பட வேண்டியதாயிருந்தது.

முதல் தேவையென்னவெனில், நீதியின் தேவைகள் சந்திக்கப்பட்டாக வேண்டும்; அதாவது பாவிக்காக மீட்கும் பொருள் கொடுக்கப்பட்டாக வேண்டும். இல்லையெனில், ஜீவிப்பதற்கான உரிமையுள்ளவனாக மனிதனை நித்தியந் தோறும் ஒருபோதும் தேவன் ஏற்றுக் கொள்ள முடியாது. இரண்டாவதாக, மனிதனை அவனுடைய ஆதி பூரணமான நிலைக்கு கொண்டு வந்தாக வேண்டும். தேவனுடைய பூரணமான சித்தம் மற்றும் நியாயப்பிரமாணத்துக்கு இசைவாக அவன் தன்னைத்தானே பூரணமாக்குவதற்கு முன்பு தேவனுடைய ரூபத்துக்கு திரும்ப வந்து சேர வேண்டும். மனுக்குலத்தின் கீழ்ப்படிதலான இந்த பழைய நிலைமைக்கு திரும்பி வந்து சேருதல், கிறிஸ்துவின் ஆயிரம் வருட மத்தியஸ்த ஆளுகையின் முடிவு வரை நிறைவு பெறாது; ஏனெனில், எல்லா சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும் வரைக்கும் அவர் ஆளுகை செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது. அதன் பின்பு ராஜ்யத்தை அவர் தேவனிடம் ஒப்புக் கொடுப்பார். (1 கொரி. 15:24-28).

"**முடிந்தது**" என்று இயேசு சொன்ன போது, அவர் இந்த ஒப்புரவாக்குதல் வேலையின் முதலாவதாக குறிப்பிடப்பட்ட பகுதியைத் தான் குறிப்பிட்டார். அதாவது மீட்கும் பொருளை கிரயமாக கொடுத்தல், அதைத்தான் அவர் சிலுவையில் முழுவதுமாக கொடுத்து, பிதாவின் கரத்தில் ஒப்புக் கொடுத்தார் அல்லது ஒப்படைத்தார்.

**தேவன் உங்கள் பிரச்சனைகளை தீர்க்கும்பொழுது அவருடைய திறன்களின் மீது நீங்கள் நம்பிக்கை கொள்வீர்கள்;**
**தேவன் உங்கள் பிரச்சனைகளைத் தீர்க்காதபோது அவர் உங்களுடைய திறன்கள் மீது நம்பிக்கை கொண்டுள்ளார்.**


அவருடைய ஒப்புரவாக்குதலின் இந்த பாகத்தைத்தான் முடிந்தது என்று அவரால் சொல்ல முடிந்தது. ஆதாமின் பாவத்திற்கான தண்டனையாகிய மரணத்தை அவர் அனுபவித்தார். "**கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்.**" (1 கொரி. 15:3). "**அவர் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்கு பதிலாக நீதியுள்ளவராய் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்.**" (1 பேது. 3:18). "**அவர் எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்தார். இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது.**" (1 தீமோ. 2:6). "**நம்முடைய பாவங்களை** (சபையின்) **நிவிர்த்தி செய்கிற** (திருப்தி செய்தல்) **கிருபாதார பலி அவரே: நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல: சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.**" (1 யோவா. 2:2). முதலாவதாக இயேசு-வானவர் சுவிசேஷ யுகத்தின் போது சிறுமந்தை மற்றும் திரள்கூட்டமாகிய (வெளி. 7) முதற்பேரானவர்களின் சபை சார்பாக (எபி. 12:23) நீதியைத் திருப்தி செய்கிறார். அதன் பின்பு அவர் ஆயிரம் வருட யுகத்தில் மனுக்குலத்தின் ஆதாமிய பாவங்களுக்காக ஈடு செய்து உலகத்தார் சார்பாக நீதியைத் திருப்தி செய்கிறார். ஒவ்வொரு காரியத்திலும், அவர்கள் அங்கே அவருடைய மகிமையை பிரதிபலிக்கிற வர்களாக, அதாவது சபையை புது சிருஷ்டிகளாகவும் (மத். 5:48; யோவா. 17:23; ரோம. 8:29; 2 கொரி. 3:18; கொலோ. 1:22,23,28; 4:12), உலகத்தாரை பூரண மனுக்குலத்தாராக, முழுவதும் திரும்பக் கொண்டு வரப்பட்ட நிலையில், அவர்களை தேவனுடைய சாயலில் பூரணமான நிலைக்கு கொண்டு வருகிறார். (அப். 3:19-21; ஏசா. 35:8-10; வெளி. 5:13). இவ்வாறு இயேசுவானவரின் மகா ஒப்புரவாக்குதல் வேலை அதாவது மனுக்குலத்தாரை தேவனுடைய சாயலுக்கு திரும்பிக் கொண்டு வருதலும், தேவனோடு முழு அளவில் ஒப்புரவாக்குதலுமாகிய இந்த வேலை சுவிசேஷ யுகம் மற்றும் ஆயிரம் வருட யுகம் முழுவதையும் அதை நிறைவேற்றி முடிக்க எடுத்துக் கொள்ளுகிறது.

மீகா. 4:8-ல் மந்தையின் துருக்கமே (கிறிஸ்து) சீயோன் குமாரத்தியின் அரணே, முந்தின ஆளுகை உன்னிடத்தில் வரும் என்ற வாசிக்கிறோம். சங். 2:8-ல் தேவன் இயேசுவிடம் பேசுவதாக, தீர்க்கத்தரிசனமாக சொல்லப்பட்டிருக்கிறது. "**என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்கு சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்கு சொந்தமாகவும் கொடுப்பேன்.**" இயேசுவானவர் உலகத்தார் சார்பாக, ஆயிர வருட யுகத்தின் ஆரம்பத்தில் இதைக் கேட்கிறார். பவுல் அப்போஸ்தலர் அவருக்குச் சொந்தமானவர்களாக மீட்கப்படுதல் என்று (எபே. 1:14) குறிப்பிடுகிறார். இயேசுவானவர் அவர் கூறியுள்ள உவமை-களில் ஒன்றில், மனுக்குலத்தாரை மட்டுமல்லாமல் (பொக்கிஷம்) சாபத்தின் கீழ் உள்ள நிலத்தையும் (உலகம், பூமி) கொள்ளுவதற்காக ஒரு மனுஷன் தனக்கு உண்டான

எல்லாவற்றையும் (அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி) விற்றான் என்று இதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

ஆயிர வருட யுகத்தின் போது, பூமியிலுள்ள சகல வம்சங்களுக்குமான ஆசீர்வாதம் (ஆதி. 22:16-18; கலா. 3:8,16,29) தலையும் சரீரமுமாகிய கிறிஸ்து மூலமாக (வெளி. 22:17) ஆவிக்குரிய பிரதேசத்தில் திரள் கூட்டத்தார் வெளி. 7:15; சங். 45:14,15) பூமிக்குரிய பிரதேசத்தில் மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்கள் (ஏசா. 2:3; 32:1; சங். 45:16), பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள் (சங். 72:3; 114:1; ஏசா. 55:12), மாம்ச இஸ்ரயேலர் மற்றும் பிரதிஷ்டை செய்யாத குவாசி எலெக்ட் வகுப்பார் (சங். 107:21,22; யோவேல் 2:28,32; E.Vol.17, பக்கம் 348-350; PT 1941 பக்கம் 50, 1950 பக்கம் 172) மற்றும் செம்மறியாட்டை போன்ற திரும்பக் கொடுத்தலைப் பெறும் வகுப்பார் ஆகியோர் உதவியுடனும் (சங். 107:31,32; மத். 25:34-40) வந்து சேரும்.

பூமியின் மீது மனுக்குலத்தாரின் ஆளுகை, கிறிஸ்துவினால் ஆயிரம் வருட யுகத்தின் முடிவு வரை மட்டும் முழுவதுமாக திரும்பக் கூட்டிச் சேர்க்கப்படுவதாக இராமல், கொஞ்சக் காலத்திற்கு பிறகு (வெளி. 20:2,3,7-9) அவர் நீதிமான்களாகிய மனுக்குலத்தாரிடம், வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல், உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் (மத். 25:34) என்று சொல்லும் போது திரும்பக் கூட்டிச்சேர்க்கப்படுவதாக இருக்கும் செவ்வையானவர்கள் பூமியிலே வாசம் பண்ணுவார்கள்; உத்தமர்கள் அதிலே தங்கியிருப்பார்கள் (நீதி. 2:21). நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொண்டு, என்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள். (சங். 37:29 -ஐ வசனங்கள் 9,11,22,34 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்). தேவனுடைய திட்டமானது, பூமி நான்கு ஆளுகைகளை, நான்கு ஆளும் அதிகாரங்களையம் அனுபவித்ததாக இருக்கும்; அவைகள்: (1) தேவனுடைய ஆளுகையின் கீழ் மனிதன், (2) சாத்தானுடைய ஆளுகையின் கீழ் மரணம் மற்றும் தீமை, (3) கிறிஸ்துவின் ஆளுகையின் கீழ் நீதி, (4) பழைய நிலைக்கு திரும்பக் கொண்டுவரப்பட்ட முதல் ஆளுகை அதாவது தேவனுக்கு கீழாக மனிதன். ***




# தேவனுடைய விசேஷித்த ஜனங்களின் சிறப்பியல்புகள்

Characteristics of God's Peculiar People

**"சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும்" (தீத்து 2:14)**

மற்றவர்கள் ஊதியங்களையும், தற்காலத்திலுள்ள தனிப்பட்ட மேன்மைகளையும் நாடும்போது, தேவனுடைய விசேஷித்த ஜனங்கள், தேவன் தங்களுடைய மனங்கள் மற்றும் இருதயங்களுக்கு முன்பாக நிறுத்தியிருக்கிற அற்புதமான காரியங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து, இந்த உலகத்திலுள்ள எல்லா காரியங்களையும் நஷ்டமும், குப்பையுமாக எண்ணுகிறார்கள். அவர்கள் விலையுயர்ந்த முத்துக்களைப் பார்த்து, அதைக் கொள்ளும்படி தங்களுடையதையெல்லாம் கொடுத்திருக்கின்றனர். தேவனுடைய ராஜ்யம் அதன் எல்லா துறைகள், ஒழுங்குமுறைகள் மற்றும் நோக்கங்களும், அதன் வெகுமதியான நித்தியமான ஜீவனுடன் மிக அற்புதமான மற்றும் மதிப்பு மிக்க காரியமாக இருந்து வந்ததையும் இப்பொழுது அல்லது எப்போதுமே அடைந்து கொள்ள வேண்டியதுமாக இருக்க காண்கிறதும், தேவனுடைய அழைப்பை ஏற்று, தேவனுடைய நல்விருப்பத்துக்கு இசைவாக அவர்கள், அதில் ஒரு இடத்தை விரும்பவும், அதில் ஊழியம் செய்யவும் வாஞ்சையுடன் விரும்புகின்றனர். அவர்கள் இந்த ராஜ்யமாகிய முத்தை அடைந்து கொள்வதற்கான நிபந்தனைகளை கண்டறிந்து கொண்டதுடன், அதை எப்படியாவது வாங்கிக் கொள்ளும்படி நாடுகிறார்கள். அந்த நிபந்தனைகள் சுயத்தை பலியிடுதல் எந்தவிலை கொடுத்தாவது தேவனுக்கு உண்மைத்துவமாயிருத்தல், எதிரான நிலைமைகளின் கீழும், முடிவு பரியந்தமும், பொறுமையுடன் சகித்திருத்தல் ஆகியவைகளாகும். (மத். 16:24; 24:12,13).

தேவனுடைய விசேஷித்த ஜனங்கள் இந்த உலகத்துடன் ஒத்துப் போகிறதில்லை, ஆனால் தங்கள் மனங்கள் புதிதாகிறதினாலே மறுரூபமாக்கப்படுகிறார்கள், அதனால் அவர்கள், தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று (ரோம. 12:2) நிரூபிக்கிறார்கள். அவர்கள் அன்பினால் தூண்டப்படுகிறார்கள். அவர்கள் தேவனை தங்கள் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பெலத்தோடும் நேசிக்கிறதுடன், அவர்கள் தங்களுடைய அயலகத்தாரை தங்களை போலவே நேசிக்கிறார்கள்; அவர்கள் தங்கள் சத்துருக்களையும் கூட நேசிக்கிறார்கள். (மாற். 12:30,31; மத். 5:44); கர்த்தருடைய வழிகாட்டுதலின்படி, அவர்கள் தங்கள் இரட்சிப்பு நிறைவேற, பயத்தோடும் நடுக்கத்தோடும் பிரயாசப்படுகிறார்கள். (பிலி. 2:12).

இந்த விசேஷித்த ஜனங்கள் முழுமையாக பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் – அவர்கள் ஒவ்வொரு நோக்கம், எண்ணம், வார்த்தை மற்றும் செயல் எல்லாவற்றிலும் தங்களை முழுமையாக தேவனுக்கு அர்ப்பணித்து இருக்கிறார்கள். தாங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும் என்பதே தங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது என்பதை அவர்கள் அறிந்து கொள்ளுகிறபடியால் (1 தெச. 4:3; 1 கொரி. 10:31; 2 கொரி. 10:5; 2 தீமோ. 2:19-21); நீங்கள் மிகுந்த கனிகளைக்

கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார் எனக்கும் சீஷராயிருப்பீர்கள் (யோவா. 15:8) என்ற இயேசுவின் வார்த்தைகளை நினைவுகூர்ந்து, ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (மிதமாயிருத்தல்) என்பதை உணர்ந்தவர்களாக (கலா. 5:22,23,25; P6, பக்கம் 186 பார்க்கவும்); அவர்கள் ஆவியின்படி நடந்துக் கொண்டும் தேவனுடைய வசனத்தைப் படித்துக் கொண்டும், பயிற்சி செய்து கொண்டும், பரவச் செய்து கொண்டுமிருக்கிறார்கள், அப்படியே அவர்கள், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் வளருகிறார்கள். (2 பேது. 3:18).

அவர்கள் இந்த வரிசையில் தங்களிலும், மற்றவர்களிலும் அதிக கனி கொடுப்பவர்களாயிருக்கும்படி நாடுகிறார்கள், ஏனெனில் இவைகளே கற்பனை செய்து பார்க்ககூடிய அளவுக்கு மிகுந்த கிருபையுள்ள குணங்களும், இயல்புகளுமாயிருப்பதை அவர்கள் கண்டு கொள்கிறார்கள். அவர்கள் இவ்வாறாக இரட்டிப்பான விருப்பமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் நற்கிரியைகளைச் செய்ய வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். மற்றவர்கள் நன்றாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதைக் காண அவர்கள் விரும்புகிறார்கள்; தேவனுடைய துதிகளைப் பிரஸ்தாபிக்க விசேஷமாக அவர்கள் விரும்புகிறார்கள், தேவன் பிரியப்படுகிற காரியங்களையே அவர்கள் நேசிக்கிறார்கள், ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவின் ஆவியுமாகிய தேவனுடைய ஆவியையே பெற்றிருக்கிறார்கள். (தீத்து 3:1).

அவர்கள் நிச்சயமாகவே சமூக முன்னேற்றம், உலகப்பிரகாரமான கல்வி, சன்மார்க்க சீர்திருத்தங்கள், பொதுமக்கள் நலனில் அக்கறையுள்ள முகாம்கள் முதலியவற்றில் ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றனர், ஆனால் அவர்கள் இப்படிப்பட்ட செயல்பாடுகளில் ஈடுபடுவார்கள் என்பதாக இது அர்த்தப்படுத்தவில்லை. ஒரு மனுஷன் ஒரே நேரத்தில் மிகச் சிறந்த போதகராகவும், வெற்றிகரமான வழக்கறிஞராகவும், செழிப்பான தொழில் அதிபராகவும் இருக்க முடியாது. அவன் செழிப்பான தொழில் அதிபராக இருப்பாரானால் அவன் தன்னுடைய தொழிலுக்கு தன்னுடைய விசேஷ கவனத்தைக் கொடுத்து வேறு வழிகளைத் தவிர்க்க வேண்டும். அவன் ஒரு மிகச் சிறந்த போதகராக இருக்க வேண்டுமானால், அவன் பிற நடவடிக்கைகளை மிகப் பெருமளவில் விட்டுவிட வேண்டும்.

தேவனுடைய விசேஷித்த ஜனங்களிடமும் அது அப்படித்தான் இருக்கிறது. பிதாவினால் தங்களுக்கு கொடுக்கப்பட்ட குறிப்பிட்ட ஒரு வேலை அவர்களிடம் இருக்கிறது. இந்த வேலை தான், செய்யப்பட வேண்டிய மிக முக்கியமான வேலை என்று அவர்கள் கண்டு கொள்கிறார்கள்; எனவே அவர்கள் தங்கள் கவனத்தை அரசியல் சீர்திருத்தத்துக்கோ, சமூக முன்னேற்றத்துக்கோ அல்லது அவர்களுடைய சொந்த வேலைக்கு வெளியேயுள்ள மற்ற செயல்களுக்கோ கொடுக்கமாட்டார்கள். அவர்களிடம் அது, ஒன்று செய்கிறேன் என்பதாக இருக்க வேண்டும். அவர்கள் எல்லா வேலைகளிலும் மிக உயர்வான வேலையைச் செய்வதால், அவர்கள் ஒரே நோக்கமுடையவர்களாக இருக்க வேண்டும்.

இந்த காரணத்துக்காக, அவர்கள் நடைமுறை ஜனங்கள் என்பதற்கு பதிலாக கொள்கையாளர்களாக அழைக்கப்படுகிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் எல்லாவற்றைப் பார்க்கிலும் மிகச் சிறந்த நடைமுறை திட்டத்தைப் பெற்றிருக்கிறார்கள்; ஏனெனில் தேவனுடைய திட்டம் தான் எல்லா திட்டங்களிலும் மிகவும் செயல்முறை சார்ந்ததாக இருக்கிறது. இந்த ஜனங்கள், தேவனுடன் உடன் வேலைக்காரர்களாக ஆவதில் மிகவும் ஞானமுள்ள போக்கை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆனால் தங்கள் சொந்தமான நல்ல கிரியைகளில் ஈடுபட்டிருக்கிற மற்றவர்களை அவர்கள் குற்றப்படுத்துகிறதில்லை. மேலான காரியங்களை கிரகித்துக் கொள்ளக் கூடியவர்கள் மட்டுமே காண்கிற கண்களும், கேட்கிற செவிகளும் உள்ளவர்கள் என்பதாக அவர்கள் காண்கிறார்கள்; மற்றவர்கள் தாங்கள் காண்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் அப்பால் போக முடியாது என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். தேவனுடைய விசேஷித்த ஜனங்களின் விசேஷித்த காரியங்கள் ஜீவியத்தின் எல்லா காரியங்களுக்கும் நீண்டு செல்வதுடன் அவர்கள் தேவனை தங்களுக்குரிய எல்லாவற்றிலும் முதன்மையானவராக வைக்கிறார்கள்.

எனவே நாம் நம்மை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு (1 பேது. 2:9) மிகச் சிறந்த உற்சாகப்படுத்துதலை நம்முடைய ஒவ்வொரு நோக்கு நிலையிலிருந்தும் பெற்றிருக்கிறோம். நாம் ஒரு சமயம் இருளில் இருந்தோம் என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம்; இப்போதோ நாம் வெளிச்சத்தில் இருக்கிறோம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம் என்று இந்த வேத வாக்கியம் நமக்கு உணர்த்துகிறது. நாம் தேவனுடைய மகா தயவையும், யுகங்களைப் பற்றிய அவருடைய மகா பெரிய திட்டத்தையும் அவர்களுக்கு சொல்வதின் மூலம் அப்படியாக அவர்கள் இருளிலிருந்து வெளியேறி வெளிச்சத்துக்குள் வர உதவி செய்வதையும் விட வேறு மிகச் சிறந்த எந்த நன்மையையும் இந்த உலகத்துக்கு நம்மால் செய்ய இயலாது. நாம் மற்றவர்களின் ஆசீர்வாதத்துக்காக வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்வோம் என்பதற்காகவே வெளிச்சம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. (மத். 5:16). ***

# வேதாகம வினா

## உங்கள் அழைப்பின் ஒரே நம்பிக்கை

**கேள்வி:** உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்ற வேதாகமம் சொல்வதால் (எபே. 4:4) மேலான அழைப்பு இன்னும் திறந்துதான் இருக்கிறது என்பதை இது நிரூபிக்கவில்லையா? இல்லை, 5-வது (பாராவைப் பார்க்கவும்) வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களுடைய காரியம் எப்படி?

**பதில்:** வெட்கப்படாத ஊழியக்காரர்களாக (2 தீமோ. 2:15) நாம் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால், நாம் சத்திய

வசனத்தை நிதானமாய்ச் சத்திய வார்த்தையில் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள தேவனுடைய நோக்கம், கருத்து மற்றும் திட்டத்தைக் கற்றுக் கொள்ளுமளவுக்கு நாம் அதை நிச்சயம் ஜாக்கிரதையாகக் கற்றுக் கொள்ள வேண்டும். அவருடைய இரகசியங்களை (சங். 25:14) நாம் அறிந்து கொள்வதால், பல்வேறான வேத வாக்கியங்களை எப்படி, எப்பொழுது, எங்கே பொருத்திப் பார்க்க வேண்டும் என்பதை அறிந்து கொள்கிறோம். நாம் கர்த்தரின் முதலாம் வருகை வரை, தேவனுடைய செய்தி, முக்கியமாக பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்கள் மூலமாகவே கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் ஒரு பெரிய யுக மாற்றம் அப்பொழுது நடந்து கொண்டிருந்தது என்பதை இயேசு விவரித்துக் காட்டினார். "**நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான் வரைக்கும் வழங்கி வந்தது: அது முதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது, யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள் என்று அவர் கூறினார்.**" (லூக். 16:16; 2 தீமோ. 1:10; எபி. 2:3). நோவாவுக்கு கொடுத்த தேவனுடைய செய்தியையும், வரப்போகிற ஜலப் பிரளயத்துக்காக, ஒரு பேழையைச் செய்து கொள்ள சொன்ன ஆயத்தத்தையும், ஆபிரகாம் தனக்கு உரிய பழைய ஏற்பாட்டு காலங்களுக்கு மட்டும் பொருந்தக் கூடிய வேத வாக்கியங்களை எடுத்துக் கொண்டு, அவைகளை சுவிசேஷ யுக சபைக்கு சொல்லர்த்தமாக பொருந்தச் செய்வதும் ஏற்புடையதல்ல.

அப்போஸ்தலன் பவுல், மனம்திருந்திய யூதர்களை நியாயப்பிரமாணம் மற்றும் அதன் நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகளைத் தங்களுக்கு பொருந்தச் செய்வதை நிறுத்த நெடுங்காலம் கடினமாக உழைத்தார். (அப். 15:10; கலா. 5:1). அவர்கள் இனிமேல் நியாயப்பிரமாணத்திற்கு கீழப்பட்டிராமல் கிருபைக்கு கீழ்ப்பட்டவர்கள் என்றும், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை என்றும் நினைவுபடுத்தினார் (ரோம. 6:14; 3:20,25; 7:1:-6; கலா. 3 முதலியவைகள்).

அதே மாதிரி, கடந்த காலத்துக்கு அல்லது எதிர்காலத்தக்கு பொருந்தக் கூடிய பிற வேத வாக்கியங்களை எடுத்துக் கொண்டு அவைகளை நிகழ்காலத்துக்கு பொருந்தச் செய்வதும் ஏற்றதல்ல. நாம் சத்திய வசனத்தை நிதானமாகப் பகுத்துப் போதிக்க வேண்டும். Epiphaneia எபிஃபெனியா மற்றும் Apokalupsis - அப்போகாலுப்ஸிஸ் இரண்டும் 40 வருட காலப்பகுதிகளைக் கொண்டது என்றும், ஒரே காலத்தைச் சேர்ந்த ஒன்று ஒத்த சொற்கள் ஒரே மாதிரியானவை என்றும் அவைகள் மாற்றத்துக் கான காலப்பகுதி என்றும் ஜாண்சன் போதகர் வேதவாக்கியங் களிலிருந்து நிரூபித்துக் காட்டியுள்ளார். இந்தக் காலப்பகுதியில், முழு உபத்திரவ காலம் என்ற நோக்கு நிலையில் பெரிய யுக மாற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் மற்றும் பரம அழைப்புக்கான பிரவேசம் 1914-ல் அதாவது, ஒவ்வொரு நாட்டிலும், தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் நெற்றியில் முத்திரை-யிடுதல், காற்று அடிக்கத் தொடங்குவதற்கு முன்பே 1916-ல் முடிவடைந்து விட்டது என்றும், நான்காவது தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாகிய வாலிபரான பாத்திரவான்களும் கூட எபிஃபெனி (அதன் குறுகிற கருத்தில்) ராஜ்யமாகிய பெசிலியாவுக்குள் கவிந்து வரத் தொடங்குகிற (தொடங்கிவிட்டது) போது தங்கள் உறுப்பினர் தகுதியை 1954-ம் ஆண்டு முடிவில் நிறைவு செய்து விட்டார்கள் என்று கர்த்தர் வேத வாக்கியங்களிலிருந்து, காரண காரியங்கள் மற்றும் உண்மைகளை அதிக ஆதாரத்துடன் நமக்கு தந்திருக்கிறார். ஏனெனில், 1954 ஆம் ஆண்டுக்கும் பிறகு வாலிபரான பாத்திரவான்கள் எவரும் ஜெயம் பெறவோ "சுவிசேஷ யுக ஆசாரிப்புக் கூடார நிலையில் இனிமேல் பிரதிஷ்டையும் செய்யப்படவோ முடியாது." E.Vol.10, பக்கம்114; E.Vol.11, பக்கம் 473, 494). ஜான்சன் போதகர் மட்டுமல்ல, ரசல் போதகரும் கூடசுவிசேஷ யுக முடிவில் இங்கே கர்த்தருடைய ஜனங்களின் நிலைப்பாட்டில் நிலைமாறுதல் மற்றும் காரியங்களைச் சரிப்படுத்துதல் நேரிடும் என்று குறிப்பிட்டுள் ளார். உதாரணமாக: Z 4745, கடைசி பாராவுக்கு அடுத்தது, 4876 பத்தி. 2 பாரா 1; E.Vol 4, பக்கம் 126,127,322 பார்க்கவும்).

ஆசரிப்புக் கூடார அடையாளச் சித்திரம் முன்னேற்ற-மடைந்து கொண்டிருக்கிறது PT 1940, பக்கம் 13,14; PT 1959,பக்கம் 34-44,56-60); அதனடிப்படையிலேயே நடத்தப் பட வேண்டும். வேத வாக்கியங்களின் தெளிவான போதனை-களுக்கு முரணான தப்பறையான உபதேசங்களாகிய காற்றுகளால் நாம் அடித்துச் சொல்லப்படக் கூடாது. சிறுமந்தை, திரள்கூட்டம் மற்றும் வாலிபரான பாத்திரவான்கள் வகுப்பினர்கள் என்றென்றைக்குமாக அடைபட்டாகிவிட்டது. அதன்படி 1954-ம் ஆண்டிலிருந்து எபிஃபெனி ஆசரிப்புக் கூடார பிரகாரம் தன் உறுப்பினர் எண்ணிக்கையை நிறைவு செய்து விட்டது. தேவன் இப்பொழுது எபிஃபெனி ஆசாரிப்புக் கூடார பாளையத்தைக் கட்டி கொண்டிருக்கிறார் (PT 1954, பக்கம் 54-59). இவர்கள் விசேஷமாக அழைக்கப்பட்டு, தெரிந்தெடுக்கப்பட்டு உண்மை யுள்ள பிரதிஷ்டை செய்தவர்களாயிருக்கிறார்கள்; இவர்களை பிரதிஷ்டை செய்த பாளையக்காரார்கள் என்று நாம் குறிப்பிடு கிறோம். பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரார்கள் என்பவர்கள் யூதர்கள் மற்றும் புறஜாதிகள் இரண்டிலுமிருந்து 1954 செப்.16-க்குப் பின்பு, ஆனால் பரிசுத்தப் பெரும்பாதை திறப்பதற்கு முன்புவரை இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டு, தேவனுக்கு தங்களைப் பிரதிஷ்டை செய்து, அக்காலப்பகுதியில் தங்களை உண்மையுள்ளவர்கள் என்று நிரூபிக்கும் தனி நபர்களைக் கொண்ட ஒரு வகுப்பார் ஆவர்.


Visit us at : **www.biblestandardindia.com**

**For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:**

**Laymen's Home Missionary Movement**

**Bro. V. Vincent Jeyakumar**

**[Representative of India]**

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629



**FOR PRIVATE CIRCULATION ONLY**